விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 300 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 28 ஞாயிற்றுக்கிழமை (15.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சுமார் 40 வருடங்களுக்குப் பின்னர்
# யாழ்ப்பாணம் - தமிழகம் கப்பல் சேவை ஆரம்பம்
### இணைய வழியில் ஆரம்பித்து வைத்தார் மோடி



*(யாழ்ப்பாணம்)*

*சுமார் 40 வருடங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான கப்பல் சேவை நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.*

*இணைய வழியில் குறித்த நிகழ்வை பாரத பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்தார்.* *(04ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கு பட்டதாரிகளுக்கு விரைவில் அரச நியமனம்
### அமைச்சர் டக்ளஸ் உறுதி

(மன்னார்)

வட மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, 1000 பட்டதாரிகளை விரைவில் ஆசிரியர் சேவையில் இணைக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவா 04

## கப்பல் சேவையை ஆரம்பிக்க முன்னின்று செயற்பட்டதற்காக
### மறவன்புலவு சச்சிதானந்தனுக்கு கௌரவிப்பு




(சென்னை)

காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை ஆரம்பிக்க முன்னின்று செயற் 04

வாழ்த்துகின்றோம்

இன்று நடைபெறவுள்ள
**தரம் 5 புலமைப்பரிசில்**
பரீட்சையில் தோற்றவுள்ள
மாணவர்கள் சிறந்த
பெறுபேற்றை பெற
**வாழ்த்துகின்றோம்**

## பயணிகள் கப்பல் சேவை மூலம்
# இந்திய - இலங்கை உறவு மேலும் வலுப்பெறும்
### கப்பல் சேவை ஆரம்ப நிகழ்வில் பிரதமர் மோடி



(புதுடில்லி)

காங்கேசன்துறை - நாகபட்டினம் பயணிகள் கப்பல் சேவை மூலம் இலங்கை இந்திய உறவு மேலும் வலுப்பெறுவதோடு இரு நாட்டுக் கலாசாரம், தொழில்நுட்பம், வர்த்தகம் மேம்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

*(04ஆம் பக்கம் பார்க்க)*

## உடுப்பிட்டியில் சடலம் மீட்பு

(கரணவாய்)

உடுப்பிட்டி - தொண்டைமானாறு சந்தியில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

கரணவாய்மேற்கு, கரவெட்டியைச்சேர்ந்த 19

### யாழ்.போதனா வைத்தியசாலையில்
## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
### நபர் ஒருவர் மீது மூர்க்கமாக தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் நபர் ஒருவர் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

யாழ் . போதனா வைத்தியசாலைக்கு 19

### எதிர்வரும் திங்கள் முதல்
## யாழ்.போதனாவில் கிளினிக் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்தமூன்றுவருடங்களுக்கு மேலாக சுபாஸ் விடுதியில் இயங்கிவந்த யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின்அனைத்து 19

## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் மரணம்



(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கற்கோவளம், பருத் 19

## யாழில் மாணவர்களை இலக்கு வைத்து புதிய போதைப்பொருள் விற்பனை
### பெற்றோர், ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து புதிய போதைப் பொருள் விற்பனை இடம்பெறுகின்றது.

இது தொடர்பில் பெற்றோர், ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழில் மாணவர் 19

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம் திருமண சேவை

1. ஜெர்மனியில் வசிக்கும் 35 வயது பூராடம் நட்சத்திரம் (Energy technic engineering) மணமகனுக்கு தகுந்த மணப் பெண்ணை ஐரோப்பிய நாடுகளில் எதிர்பார்க்கின்றோம்.
2. கனடாவில் வசிக்கும் 33 வயது கார்த்திகை நட்சத்திரம் (Accounting) மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
3. கனடாவில் வசிக்கும் 32 வயது உத்தராடம் நட்சத்திரம் மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்ள
சொர்க்கம் திருமண சேவை
(C-7429)

**001 416 666 1855** (கனடா)
**077 887 6969**
**077 200 0230** (யாழ்ப்பாணம்)

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன்,பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? ➤முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர் கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
**இந்த எண்ணையைப் பாவித்து பயனடைய**
(17463)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா? குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7420)

**021 222 1265, 076 250 0098, 077 815 5920**

## வியாபாரப் பதிவு

உங்கள் "வியாபாரப் பதிவை" (Business Registration) வெற்றிகரமாக 5 நாட்களில் பதிவு செய்து தருகிறோம். Yarl Ventures, அரசாங்க அங்கீகாரம் பெற்ற செயலக நிறுவனம் (Secretarial Firm) 2015 முதல் 1200க்கும் மேற்பட்ட வணிகங்களை பதிவு (Company Registration) செய்துள்ளோம்.

*Contact Us* (17464)

**Yarl Ventures, Ottumadam, Jaffna**
**077 211 5548**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை WESTERN UNION MONEY TRANSFER, Ria, MoneyGram money transfer ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7427)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## தேவை

பேப்பர்கவுஸ், பாடசாலை அலுவலக அச்சக பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு
**விற்பனையாளர், கணக்காளரும்**
**சிட்டை எழுதுனரும்**
நேரில் வரவும்.
**பேப்பர் கவுஸ்**
**இல. 300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
(17467)

## விற்பனைக்கு

Original Camry 10Kg தராசு மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
மொத்தமாக கொள்வனவு செய்பவர்க்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
(17468)



**077 0777 365**
**SUKREEVA MULTI TRADERS JAFFNA**

## காணி விற்பனைக்கு

யாழ் மணிக்கூட்டு வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நீராவியடி பிள்ளையார் கோவில் பக்கம்
(17456)

**Whatsapp -**
**077 710 2692**

## வேலையாட்கள் தேவை

எமது உணவகத்திற்கு
- கொத்து, றைஸ் போடுபவர்கள்
- சமையல்காரர்
- உதவியாளர் தேவை.

(17460)

**077 629 0894**


# மரண அறிவித்தல்



**மண்ணுலகம்** 19.02.1942
**விண்ணுலகம்** 13.10.2023

# சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம்

பருத்தித்துறை தும்பளை சாஸ்திரியார் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் குடத்தனை கிழக்கு குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம் அவர்கள் கடந்த (13.10.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும் சிவராஜா, பாலமுரளி, ஜெயராஜன் காலஞ்சென்ற சிவனேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமணி, நளாயினி, தர்மினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லகீசன், சரவணன், டிலக்சி, சஜீசன், சதுர்சன், மகீசன், பவனியா ஆகியோரின் நேசமிகு பேரனும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி மற்றும் பத்மநாபன், தருமபாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரனும் கார்த்திகேசு, குகதாஸ், கிருஷ்ணதாஸ், புவனேந்திரம், மனோரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2023 நாளை திங்கட் கிழமை பி.ப 1.00 மணியளவில் குடத்தனை கிழக்கு, குடத்தனையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடத்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 175 7515
076 [illegible] 7946

(C-7428)

*தகவல்:*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகை-காங்கேசன் கப்பல் சேவையை ஆரம்பித்து வைத்தார் மோடி








# காங்கேசன்துறைமுகத்தை வந்தடைந்த பயணிகள் கப்பல்









## டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் அதிகரிப்பு 16 பிரிவுகளுக்கு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒக்டோபர் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 684 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வாரத்தில் 526 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அதன்படி, கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் 40 ஆவது வாரத்தில் குறித்த நோயாளர்களின் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதேவேளை, குறித்த காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 146 டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 48.2 வீதமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில், பிலியந்தலை, மொறட்டுவை, அத்தனைகல்ல, களனி, தொம்பே, இராகம, கம்பளை, உடுநுவர, மாத்தளை, பதுளை உள்ளிட்ட 16 பிரிவுகளில் டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பம் முதல் இதுவரையில் 65 ஆயிரத்து 479 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமெனின் அது டெங்கு காய்ச்சலாக இருக்கலாம் எனவும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனடியாக வைத்தியரை நாடுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நுளம்புகள் பெருகாதவாறு சூழலை பேணுவதன் மூலம் டெங்கு நுளம்புகள் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் இதனால் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## உலகளாவிய

## காலநிலை அபாய சுட்டெண்ணில் 2 ஆவது இடத்தில் இலங்கை

(கொழும்பு)

காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் கடல் மட்ட உயர்வு காரணமாக, 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை 6,110 நிலப்பரப்பையும் 2100 ஆம் ஆண்டளவில் 25,000 ஹெக்டேயர் நிலத்தையும் இழக்கும் என நிபுணர் ஒருவர் அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

களுத்துறை, வாதுவ பிரதேசத்தில் 'காலநிலை மாற்றங்கள் சுகாதாரத்தின் மீதான தாக்கம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற செயலமர்வில் உரையாற்றிய சார்க் உணவு சங்கத்தின் துணைத் தலைவர் கலாநிதி. பி.ஜி.ஹேமந்த குமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் ஒரு வருடத்திற்குள் அதிதீவிர வானிலை நிகழ்வுகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், உலகளாவிய காலநிலை அபாய சுட்டெண்ணில் இலங்கை உலகின் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலக முட்டை தினத்தை முன்னிட்டு அமெரிக்காவின் சோயாபீன் ஏற்றுமதி சபையுடன் இணைந்து இலங்கையில் உள்ள சார்க் உணவு சங்கமும் உலக கோழி அறிவியல் சங்கமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ரோகித்து மீண்டும் கெத்து

# பரம வைரி பாகிஸ்தானை பந்தாடியது இந்தியா

### ஆட்டம் எதிர்பார்த்தளவு சூடுபிடிக்கவில்லை



ரோகித், ஸ்ரேயாஸ் அரைசதம் அடித்து வைகொடுக்க பாகிஸ்தானை இந்திய அணி 7 விக்கெட்டுகளால் இலகுவாக் வீழ்த்தியது.

இந்தியாவில் 13வது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

நேற்று அகமதாபாத்தில் நடந்த முக்கிய லீக் பேரட்டியில் பரம வைரிகளான இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா, களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் தொடக்க வீரர் இஷான் கிஷான் நீக்கப்பட்டு சுப்மன் கில் மீண்டும் சேர்க்கப்பட்டார்.

இதன்படி முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 42.4 ஓவரில் அனைத்து விக்கெடடுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

அணித் தலைவர் பாபர் ஆசம் (50), ரிஸ்வான் (49), இமாம் உல் ஹக் (36), ஷபிக் (20) ஓரளவு கைகொடுத்தனர். இந்தியா சார்பில் பும்ரா, சிராஜ், ஹர்திக் பாண்ட்யா, குல்தீப்யாதவ், ஜடேஜா தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு சுப்மன் கில் (16) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். விராட் ஹோலி (16) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய ரோகித் சர்மா, 63 பந்தில், 6 சிக்சர், 6 பவுண்டரி உட்பட 86 ரன் விளாசினார். பொறுப்பாக ஆடிய ஸ்ரேயாஸ், நவாஸ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி அரைச்சதம் கடந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இந்திய அணி 30.3 ஓவரில், 3 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஸ்ரேயாஸ் (53), ராகுல் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 14 |
| 09 | 10 |
| 1946 | 2023 |

### மாணிக்கம் செல்லத்தம்பி
### (ஆச்சாரியார்)

யாலப்பை வீதி, மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் செல்லத்தம்பி அவர்கள் 14.10.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - ரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் (கிளி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, பாலசுப்பிரமணியம், லோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசிகரன் (மந்திகை ஸ்ரீகிஸ்னா சில்வர் வெல்டிங்), முகுந்தன் (மந்திகை ஸ்ரீகிஸ்னா சில்வர் வெல்டிங்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விகுந்தா, டர்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் வவிசன், சஸ்மினா, வர்னிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2023) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யாலப்பை வீதி, மாதனை, பருத்தித்துறை. (17465)

தகவல்:- குடும்பத்தினர் 077 632 7609, 077 281 4235

## இந்திய - இலங்...

தமிழகத்தின் நாகபட்டினத்துக்கும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை நேற்றுக் காலை 8.30 மணியளவில் நிகழ்நிலை மூலம் டில்லியில் இருந்தபடி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

அவர் மேலும் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தியா - இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை இருநாடுகளுக்கு இடையேயான நமது உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய மைல்கல். இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளோம்.

இதன்மூலம் இரு நாட்டு கலாசாரம், தொழில் வர்த்தகம் மேம்படும். இந்தியாவும் இலங்கையும் கலாசாரம், வர்த்தகம் மற்றும் நாகரிகத்தின் ஆழமான வரலாற்றுப் பதிவை கொண்டுள்ளவை.

நாகபட்டினம் மற்றும் அருகிலுள்ள நகரங்கள் நீண்ட காலமாக இலங்கை உட்பட பல நாடுகளுடன் கடல் வணிகத்துக்குப் பெயர் பெற்றவை. சுப்ரமணிய பாரதியாரின் ‘சிந்து நதியின் மிசை’ பாடலில், பட்டினப்பாலை, மணி மேகலை முதலிய சங்க இலக்கியத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடல்வழி போக்குவரத்து இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இந்தக் கப்பல் சேவை அந்த வரலாற்று மற்றும் கலாசார தொடர்புகளை உயிர்ப்பித்திருக்கின்றது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தின்போது, நமது பொருளாதாரப் பங்காளித்துவத்துக்கான தொலைநோக்கு ஆவணத்தைக் கூட்டாக ஏற்றுக்கொண்டோம்.

இணைப்பு என்பது இரண்டு நகரங்களைக் கொண்டுவருவது மட்டுமல்ல. மேலும் இது நமது நாடுகளை நெருக்கமாக்குவது, நமது மக்களை நெருக்கமாக்குவது மற்றும் நமது இதயங்களை நெருக்கமாக்குவது. இணைப்பு வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்கள் - மக்கள் உறவுகளை மேம்படுத்துகின்றது. இது இரு நாட்டு இளைஞர்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றது.

2015 முதல் இரு நாடுகளுக்கும் இடையே போக்குவரத்து இணைப் மேம்பட்ட ஒத்துழைப்பு இருக்கும். 2015 இல் நான் இலங்கைக்கு பயணம் செய்ததைத் தொடர்ந்து, டில்லிக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்கப்பட்டது.

பின்னர், இலங்கையிலிருந்து குஷி நகரில் முதல் சர்வதேச விமானம் தரையிறங்கியதைக் கொண்டாடினோம். 2019இல் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நேரடி விமான சேவை தொடங்கியது. தற்போது, நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை மற்றொரு முக்கியமான படியாகும்,” என்றார். (ம-7)

## யாழ்ப்பாணம்...

நாகபட்டினம் துறைமுகத்தில் இருந்து காலை, 50 பயணிகள் மற்றும் ஊழியர்களுடன் காங்கேசன்துறையை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்த கப்பல் மதியம் 12.20 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

கப்பலின் வரவேற்பு நிகழ்வில் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து மதியம் 1.20 மணியளவில் மீண்டும் நாகபட்டினத்திற்கு 31 பயணிகளுடன் தனது பயணத்தை ஆரம்பித்த கப்பலை இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் பச்சைக்கொடி அசைத்து வழியனுப்பி வைத்தார்.

இறுதியாக 1984ஆம் ஆண்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் கப்பல் சேவை இடம்பெற்றிருந்த நிலையில் நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து கப்பல் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. சுமார் 40 வருடங்களின் பினனர் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. (ம-7,33,104)

## வடக்கு...

னந்தா அறிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க 1000 பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதுடன் புதிய தொண்டர் ஆசிரியர்களை சேவையில் இணைக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## கப்பல் சேவை...

பட்டதற்காக மறவன்புலவு சச்சிதானந்தனுக்கு கௌரவிப்பு மேற் கொள்ளப்பட்டது.

நாகபட்டினம் - காங்கேசன் துறை கப்பல் சேவை தொடக்க விழா நேற்று நாகபட்டினம் துறையில் காலை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்பலவு சச்சிதானந்தனும் சென்ற நிலையில் குறித்த கப்பல் சேவையை செயற் படுத்துவதற்கு முன்னின்று உழைத் தமைக்காக நாகபட்டினம் வணிகர் சங்கத்தினர் அவரின் சேவையை பாராட்டி கௌரவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அனைத்து மக்களுக்கும் விரைவில் நிவாரணம்

## ஜனாதிபதி உறுதி

**(கொழும்பு)**

**நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் அறிந்துள்ளதெனவும், பொருளாதார பிரச்சினைகளை விரைவில் தீர்த்து அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழுங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



கல்வி ஆய்வுகளுக்கான வரி விதிப்பு தொடர்பில் புதிய சுற்று நிருபமொன்றை வெளியிடுவதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து அடுத்த 3 வாரங்களுக் குள் தமக்கு அறிக்கையொன்றை சமரப்பிக்குமாறு ஜனாதிபதி இதன் போது அதிகாரிகளுக்கு பணித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# வேலை பெற்றுத்தருவதாகக் கூறி ஒரு கோடி ரூபா பண மோசடி

(கொழும்பு)

ஒன்லைன் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி சுமார் ஒரு கோடி ரூபா பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கரந்தெனிய, தெனகொட பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார். நேற்று முன்தினம் கல்கிசை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நபர், நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக ஒக்டோபர் 27 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

## திருமதி. சிவசோதி சாம்பசிவம் (பெரியக்கா)

தோற்றம் 03.11.1940 மறைவு 12.10.2023



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சிவசோதி சாம்பசிவம் (பெரியக்கா) 12.10.2023 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா சாம்பசிவம் (சித்தார்த்தன்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு, சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும் பத்மாவதி, கனகாம்பிகை, தணிகாசலம் காலஞ்சென்ற மகேந்திரராஜா மற்றும் பத்மநாதன், தில்லைநாதன், பவானி, கருணாகரன், கெங்காதரன் ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவசங்கரன், நாராயணன் மற்றும் கனகரட்ணம், இராசநாயகம், ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற தயாளபூபதி மற்றும் பாலசிவகாமியம்பாள், யோகேஸ்வரி, மகேஸ்வரன், புஸ்பலதா, காயத்திரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவராசன், காலஞ்சென்றவர்களான கணேசராசா, சிவசக்தி, சண்முகராசா ஆகியோரின் அன்பு சிறியதாயும், சுகந்தி, காலஞ்சென்ற பரமகுரு (சுரேஷ்), காந்தினி, தாரணி, தயாளன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறீஸ்கந்தராஜா, சச்சிதானந்தன், ரவிச்சந்திரன், ஷோபா ஆகியோரின் அன்பு மாமியாரும் சயோதன்-அருண்ஜா, சாகித்தியன், ஷாலினி, வஜெனி, மதுஷா, விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் முப 10 மணிக்கு கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

131/4 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(சிவன் கோயில் முன் வீதி)

தயாளன் (மகன்) - 074 206 7188
தில்லைநாதன் (தம்பி) -077 726 2522

# துயர் பகிர்வு

அமரர்.திருமதி.,

## மேரிஅற்புதமலர் ஞானசம்பந்தர்

தோற்றம் 1965 . 06 . 04
மறைவு 2023 . 09 . 02



*அன்பின் ஆலமரமொன்று*
*அடியோடு சாய்ந்து விட*
*கலங்கி நிற்கின்றோம்– உங்கள்*
*ஆத்மா சாந்திக்காய்*
*இறைவனை வேண்டுகின்றோம்.*

எமது பாடசாலை ஆசிரியர்
திரு.ஞானசம்பந்தர் மில்ரன்
அவர்களின் தாயாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக
வேண்டி நிற்கின்றோம்.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை
ஆசிரியர்கள் கழகம்.

(C-7425)

# இராசிபலன்

15.10.2023
புரட்டாதி 28, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பின்னிரவு 12.38 மணிவரை
சித்திரை முன்னிரவு 7.10 மணிவரை

சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம்-4.32- 6.02 மணிவரை
நவராத்திரி விரதம் ஆரம்பம்

சந்திராஷ்டமம் -
உத்தரட்டாதி, ரேவதி

**வளவன்**

**மேஷம்**
நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்**
நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் 'தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் வழியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கடகம்**
தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்**
உறவு பகை பாராமல் உதவும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி**
குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**துலாம்**
உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம் ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள் எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**விருச்சிகம்**
குடும்ப தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**தனுசு**
நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**மகரம்**
செலவுக்கேற்ப வருமானம் கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கும்பம்**
பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள் வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மீனம்**
திடீர் செலவுகளால் சேமிப்பு சிறிது கரையலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணங்களின்போது விழிப்புணர்வு அவசியம்.

நாம் கண்டு [illegible] அன்பு செலுத்த முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி விவகாரம்

## குற்றப் புலனாய்வு பிரிவின் அறிக்கை பொய்யானது

### சுரேஷ் பிரேமசந்திரன்

(யாழ்ப்பாணம்)

குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணை அறிக்கை முற்றிலும் பொய்யானதாகவே இருக்கும். அவர்கள் சரியான விசாரணையை செய்திருக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

ஹர்த்தால் தொடர்பான முன்னாயர்த்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் யாழ்ப்பாண இல்லத்தில் இடம்பெற்றது. கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சுரேஷ் பிரேமசந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நீதிபதி சரவணராஜாவுக்கு இருந்த அச்சுறுத்தல், அவர் நாட்டை விட்டு வெளியேறியமை வெறுமனே ஒரு நீதிபதிக்கான அச்சுறுத்தலாக மட்டும் பார்க்க முடியாது.

நீதித்துறை என்பது எவ்வளவு தூரம் இந்த சிங்கள அரசாலும் அரச இயந்திரத்தாலும் அவமதிக்கப்படுகின்றது என்ற விடயத்தையே எடுத்துக் காட்டுகிறது. தமிழ் மக்களுக்கு எதிராகவே குற்றப்புலனாய்வுப் பிரிவின் அறிக்கைகள் காலாகாலமாக வெளிவந்துள்ளன.

அதுபோல் தான் நீதிபதி சரவணராஜா பற்றிய அறிக்கையும் முற்றிலும் பொய்யானதாகவே இருக்கும். சரியான விசாரணையை அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த அறிக்கையை நாங்கள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்ப முடிவெடுத்துள்ளோம்.

மேலும், தற்பொழுது கொழும்பில் இருக்கக் கூடிய இராஜதந்திரிகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன. இது தொடர்பான நடவடிக்கைகளை அடுத்தடுத்த தினங்களில் மேற்கொள்ளவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-33)

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பொதுநூலகத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் நேற்று முன்தினம் யாழ். பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, சர்வதேச தபால் தினத்தை முன்னிட்டு அஞ்சல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட முத்திரை கண்காட்சியையும் பார்வையிட்டார்.

வடமாகாண அஞ்சல் திணைக்கள அதிபர் திருமதி.மதுமதி வசந்தகுமார் முத்திரை வெளியிட்டு வைத்ததுடன், முதல் முத்திரையை யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உயர்ஸ்தானிகருக்கு வழங்கி வைத்தார். (நி-33)

# மீனவர்களின் பிரச்சினையை அரசியலாக்காதீர்கள்

## ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத்தின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

எமது பிரச்சினைகளை அரசியலாக்காது அவற்றை தீர்க்க வேண்டும் என ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத்தின் செயலாளர் அ.அன்னராசா தெரிவித்தார். யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.


மேலும் தெரிவிக்கையில் தமிழக கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி கொடுப்பது தொடர்பாக அரசாங்கம் பரிசீலிப்பதாக இலங்கை பிரதமர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் தமிழிக கடற்றொழிலாளர்களின் படகை ஒரு நொடி கூட அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் எமக்கு தெரியப்படுத்த வேண்டும்.

கடற்றொழிலாளர்கள் பிரச்சினையை இரு நாட்டு அரசாங்கமும் பேசி தீர்த்து வைக்க வேண்டும்.

அதனை விடுத்து அரசாங்கத்தில் உள்ளவர்கள் ஆளுக்கு ஒரு விடயத்தை சொன்னால் நாம் எதனை நம்புவது? இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அறிவிக்க வேண்டும் பிரதமரின் கருத்தா? கடற்றொழில் அமைச்சின் கருத்தா இறுதியானதும் தீர்க்கமானதுமானது என்பதை எமக்கு அறியத் தர வேண்டும் என தெரிவித்தார். (நி-33)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள யோக லிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக குருத்துவ பணியை மேற்கொண்டு வரும் இருபாலை சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் கலாசாலை நூற்றாண்டு நிறைவு விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

(படம்: சிவசாந்தன்)

# பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு வீடு கையளிப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நிரந்தர வீடு நேற்று சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராட்சி மேற்படி வீட்டினை கையளித்தார்.

23 லட்சம் ரூபாய் செலவில் இந்த நிரந்தர வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய நாட்டின் காம்பாஷன் சர்வதேச நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பு வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# வடமராட்சி - கொடிகாமம் வீதியில் அடிக்கடி இடம்பெறும் வழிப்பறிகள்

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் இருந்து கொடிகாமம் செல்லும் சாவச்சேரி முள்ளி வீதியால் பொதுமக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வழிப்பறிப்பு, திருட்டுக்கள் என்பன அதிகளவில் நடைபெறுகிறது.

இரு பக்கமும் பற்றைகள் காணப்படுவதனால் திருடர்கள் ஒளிந்து நின்று வாகனங்களில் வருபவர்களிடம் நடுவீதியில் குறுக்கே நின்று வழிப்பறியில் ஈடுபடுகிறார்கள்.

இதனால் மக்கள் இவ் வீதியால் பயணம் செய்வதற்கு தயங்குகிறார்கள்.

இச் சம்பவங்கள் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (நி-60)



தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீராங்கனைகள் மற்றும் இளவாலை சென்.ஹென்றிஸ் வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நேற்று முன்தினம் நிகழ்த்தப்பட்டது.

(படங்கள்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 411
Viber 076 636 3378



# பற்றி எரியும் பாலஸ்தீன்: எங்கு செல்லும் இந்த யுத்தம்?



இருபது நிமிடங்களில் ஐயாயிரம் ஏவு கணைகள் என்பதைக் கண்ணால் அல்ல மனக்கண்ணால் கூட முழுதாகப் பார்த்து முடிக்க முடியாது. ஒக்டோபர் ஏழாம் திகதி இஸ்ரேலின் காஸா பகுதியில் இருந்து சீறிப் பாய்ந்த இந்த ஏவுகணைகள் இஸ்ரேலிய இராணுவத்தினரைக் குறி வைத்து அனுப்பப்பட்டதாக சொல்லப்பட்டாலும், இந்த நூற்றாண்டு காலப் பகையின் தற்கால சாட்சியாக இஸ்ரேலில் வாழும் சாதாரண மக்கள் (யூதர்கள்) சுமார் எண்ணூறு பேராவது தற்போது வரை இதில் கொல்லப்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது.

மறுபுறம் இஸ்ரேல் தனது பதில் தாக்குதலைத் தொடங்கியதன் விளைவாக காஸா நகரம் மீண்டும் ஒரு பேரழிவுக்கு ஆயத்தமாகிவிட்டது. ஹமாஸ் முகாம்கள் என்று குற்றம் சாட்டி, பெரும்பாலான குடியிருப்புப் பகுதிகளில் தான் குண்டு வீசப்படுகிறது. அந்தப் பக்கத்து மரணங்கள் பற்றிய தோராயக் கணக்கு கூட இன்னும் சரியாக வரவில்லை. கண்ணில் படும் தகவல்களெல்லாம் வெறும் ஊகங்கள் மட்டுமே.

ஹமாஸ் தாக்கத் தொடங்கியதுமே இரண்டு விஷயங்கள் தீவிரமாக அலசப்படத் தொடங்கின.

1. இது உக்ரைன் போர் போல இன்னொரு முடிவற்ற போர் ஆகுமா?

2. இஸ்ரேலிய உளவுத் துறை மொசாட் உலக அளவில் பிரபலம். சர்வ சக்தி பொருந்திய அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏவின் செல்லக் குழந்தை. காஸாவில் இருந்து ஹமாஸ் தாக்கப் போகிறது என்பதை அவர்கள் எப்படிக் கோட்டை விட்டார்கள்?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்டு மற்ற கதைகளுக்குள் போவோம்.

முதலாவது. இஸ்ரேல்-பாலஸ்தீன் பகை என்பது மிகவும் புராதனமானது. 1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்கிற நாடு உருவானதில் இருந்து நடக்கிற போர் அது. உண்மையில் அதற்கெல்லாம் வெகு காலம் முன்பிருந்தே அந்நிலமெல்லாம் ரத்தம்தான். ஜெருசலேம் என்று ஒரு நகரம். முஸ்லிம்களுக்கு அது மெக்கா, மதீனாவுக்கு அடுத்தபடி. கிறித்தவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். யூதர்களுக்கும் அது புனித நகரம். வம்பு வழக்குக்கு இந்த ஒன்று போதாதா?

ஜெருசலேம் இப்போது இஸ்ரேலின் பிடியில் இருக்கிறது. இப்போது என்ன, எப்போதும் அப்படித்தான். அதனால்தான் எப்போதெல்லாம் நினைத்துக்கொள்கிறார்களோ, அப்போதெல்லாம் போர் தொடங்கிவிடுகிறது. கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் மீது ஹமாஸ் தொடங்கியிருக்கும் போர் இதன் தொடர்ச்சியே. புதிய காரணம் என்று ஏதும் இதுவரை சொல்லப்படவில்லை என்பதைக் கவனியுங்கள்.

இரண்டாவது கேள்வி, மேற்படி விவகாரத்தில் மொசாட் கோட்டை விட்டதா என்றால் அதற்கு இரண்டு பதில்களைச் சொல்ல முடியும்.

1. ஆம், கோட்டை விட்டது.

2. இல்லை. திட்டமிட்டு அவர்கள் ஹமாஸ் தாக்குதலைத் தொடங்க வழிவிட்டு ஒதுங்கி நின்றிருக்கிறார்கள்.

**இது ஒரு முழு நீள யுத்தமாகும் சாத்தியத்தைக் காட்டிலும், பாலஸ்தீனியர்கள் குறுகிய காலத்தில் நிறைய இழப்புகளைச் சந்திக்க வேண்டிய சூழ் நிலையே வரும் என்று தோன்றுகிறது. அவர்களது சுதந்திர பாலஸ்தீன் கனவு நனவாகும் நாள் இன்னும் சிறிது ஒத்திப்போடப்படும்.**

ஏனெனில், ஒவ்வொரு போரையும் இஸ்ரேலே தொடங்கியிருக்கிறது. ஒவ்வொரு முறையும் அவர்கள்தாம் முதல் வேட்டையாடிகளாக இருந்திருக்கிறார்கள். பாலஸ்தீனிய முஸ்லிம்கள் இண்டிஃபாதா என்று ஊர்வலம் போவார்கள், கிளர்ச்சி கோஷம் எழுப்புவார்கள். கல் வீசுவார்கள், தீ வைப்பார்கள் எல்லாம் செய்வார்கள்தான். ஆனால் யுத்தம் என்கிற பெரிய வட்டத்துக்குள் அவர்களை இழுத்துப் போட்டு அடிப்பது இஸ்ரேலிய இராணுவமாகத்தான் இருக்கும். இது சரித்திரம்.

இம்முறை அதைச் சற்று மாற்றினால் என்ன? முதல் தாக்குதல் ஏன் ஹமாஸினுடையதாக இருக்கக் கூடாது?

இதற்குச் சில அரசியல் காரணங்கள் உண்டு. பொதுவாகவே பாலஸ்தீனியர்களின் போராட்டங்களுக்கு இதர அரபு நாடுகள் உதவாது. அரபு சகோதரத்துவம் அது இதுவென்று பேசுவார் களே தவிர, போர் என்று வந்தால் நீ யாரோ, நான் யாரோதான். ஏனெனில், இஸ்ரேலைப் பகைத்துக்கொண்டு மத்திய கிழக்கில் குப்பை கொட்ட முடியாது. அது ஏனெனில், இஸ்ரேலுக்கு ஒன்றென்றால் மறுகணம் அமெரிக்கா வரிந்து கட்டிக்கொண்டு வந்து நிற்கும்.

இஸ்ரேல் என்பது அமெரிக்காவின் மத்தியக் கிழக்கு கெஸ்ட் ஹவுஸ். பாலஸ்தீனிய அரேபியர்களைத் தாக்குவதற்கென்றே பத்து காசு வாங்காமல் வண்டி வண்டியாக இன்று வரை ஆயுதங்களை அள்ளித் தந்துகொண்டிருக்கிறது அமெரிக்கா. பதிலுக்கு அவர்கள் ஒரு சிறந்த அடியாளாக அமெரிக்காவுக்குக் கேட்பதையெல்லாம் செய்து தருவார்கள்.

கணப் பொழுது சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பக்கம் பாகிஸ்தான் தொடங்கி, அந்தப் பக்கம் எகிப்து, லெபனான், சிரியா, துருக்கி வரை மிச்சம் மீதி இல்லாமல் மொத்த நிலப்பரப்பிலும் வாழ்பவர்கள் முஸ்லிம்கள்தாம். இஸ்ரேலில் மட்டும்தான் யூதர்கள். இதில் எண்ணெய் வள நாடுகள் என்று எடுத்துக்கொண்டால் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் ஆரம்பித்து, இரான், இராக், சவூதி அரேபியா, ஏமன், ஓமன் என்று எவ்வளவோ வரும். போரால் பாதிக்கப்பட்ட ஒன்றிரண்டு தேசங்களைக் கழித்துக் கட்டினாலும் இதர நாடுகள் பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு உதவ முடியும். ஆனால் செய்ய மாட்டார்கள். அமெரிக்க பயம்.முதல் முறையாக இப்போது இரான் இந்த விவகாரத்தில் ஹமாஸை ஆதரித்திருக்கிறது. நேரடியாக அல்ல. பின்னால் இருந்து இயக்கு பவர்களாக.

கடந்த சில மாதங்களாகவே இஸ்ரேலுக்கு எதிரான இரானின் நிலைப்பாடு குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்து வந்ததையும் இரண்டு நாடுகளும் நட்புறவுடன் பழக வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து அவ்வப்போது நீதி போதனை வகுப்புகள் எடுத்ததையும் செய்தியில் கண்டிருக்கலாம். அவ்வளவு தூரம் இரான் இறங்கி அடிக்க ஆயத்தமாகிறது என்னும் போதே, அது ஹமாஸின் பின்னால் நின்று

இயக்கப் போகிறது என்பது இஸ்ரேலுக் குத் தெரியாதா அல்லது மொசாட்டுக்குத் தெரியாதா? கொஞ்சம் கூடவா ஆயத்தமா கியிருக்க மாட்டார்கள்? இதனால்தான் சந்தேகம் வருகிறது. நூறு இருநூறு பேர் தம் தரப்பில் செத்தா லும் பரவாயில்லை. (10 ஆம் பக்கம் பாக்கவும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

இன்று நவராத்திரி விரதாரம்பம். அதோட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும் இன்றும் தான் நடக்கிறது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் கூறி அமர்ந்தார்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இன்று நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது.இந்தக் காலத்தில வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தவணைப் பரீட்சையை நடத்துவதால, நவராத்திரி காலத்தில மாணவர்கள் நடத்துகின்ற இயல்,இசை, நாடகம் என்ற முத்தமிழ் நிகழ்வுகளை நடத்த முடியாமல் போகும்.அதோட நவராத்திரி காலத்தில இடம்பெறுகின்ற ஆன்மிக சொற்பொழிவுகளையும் செய்ய முடியாத நிலை ஏற்படும் என கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

**கங்காணியார்:-** செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் கூறியது நூறுவீதம் உண்மை. நவராத்திரி காலம் எண்டால், ஒரு பகுதி மாணவர்கள் இசை நிகழ்வுகளைச் செய்வதற்குத் தங்களைத் தயார்படுத்துவினம். அதேபோல கவியரங்கம்,பட்டிமன்றம், நாடகம் என்ற நிகழ்வுகளிலும் -மாணவர்கள் ஈடுபடுவினம். இதற்கு மேலாக வீணை, வயலின், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகளை இசைப்பதிலும் இசைக் கச்சேரிகளை நடத்துவதிலும் மாணவர்கள் மும்முரமாக இருப்பினம்.

இவற்றை ஆசிரியர்களும் மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பினம்.ஆனால் நவராத்திரி காலத்தில தவணைப் பரீட்சையை நடத்தும் போது கலை நிகழ்வுகளைத் தயார்படுத்துவதும் அவற்றை அரங்கேற்றுவதும் கடினமான காரியம் தான். ஏதோ இந்த முறை ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இனி மேல் இவ்வாறான தவறுகள் நடக்காமல் பாத்துக் கொள்ள வேண்டும்.

**சாத்திரியார்:-** நீங்கள் என்ன சொன்னாலும் எங்கட சைவ சமயத்திற்கு இனி வீழ்ச்சிதான்.

ஆனால், அந்த வீழ்ச்சிக்குக் காரணம் மற்றச் சமயத்தவர்கள் அல்ல. எங்கட சைவ சமயத்தை வீழ்த்துவதற்கு சைவ சமயத்தவர்களே போதும்.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியை ஊடறுத்த சிறாப்பர் கனக சபை; என்ன சாத்திரியார் சொல்லுறியள். என வினாத்தொடுத்தார்.

**சாத்திரியார்:-** நவராத்திரி காலத்தில தவணைப் பரீட்சைகளை நடத்துவதற்கு எங்கட பாடசாலை அதிபர்கள் பூரண சம்மதம் தெரிவித்ததால தான் பரீட்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக உயர்மட்டம் கூறியிருக்குது.

அப்படி எண்டால், இது விடயத்தில எங்கட அதிபர்கள் தங்கட கருத்துக்களை முன் வைத்திருக்க வேண்டுமல்லோ.

**வாத்தியார்:-** சரி... சரி... இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுவம்.

அதேநேரம் சாத்திரியார் சொல்லுற மாதிரி சைவ சமயத்தை விழ்த்தலாம் எண்டு ஆரு நினைத்தாலும் அது மகா தவறு.

ஏன் எந்த சமயத்தையும் எவரும் எதுவும் செய்ய முடியாது.


உண்மையில சைவ சமயத்துக்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றுகின்றவர்கள் இருக்கினம்.

அது தவிர,கடவுள் ஒருவன் தான். அந்த ஏகன் அநேகனாக வழிபடப்படுகிறான். இது தான் உண்மை.

இந்தாப்பாருங்க ஒரு காலத்தில இலங்கைக்கு வந்த அந்நியர்கள் சைவக் கோவில்களை இடித்து அழித்தினம்.

திருநீறு பூசுவது, வாழை இலையில சாப்பிடுவது என்பவற்றைத் தடுத்தினம்.

ஆனால் இப்ப அந்த வேலைகளைச் செய்தவர்களின்ர தாய்நாட்டில சைவக் கோவில் கட்டப்பட்டிருக்குது.



**அப்ப எங்கட தலையில குண்டு போட்டினம்**
**இப்ப அங்க குண்டுகள் விழுந்து வெடிக்குது**

அங்க திருவிழா நடக்குது,தேர் ஓடுது, வாழையிலை போட்டு சோறு பரிமாறுகினம்.

இப்படி நடக்கும் எண்டு அப்ப ஆரும் நினைச்சிருப்பினமோ.

ஆகையால சமயம் எண்ட விடயத்தில கடவுள் எண்டு பாருங்க.

அந்தக் கடவுளுக்குத் தெரியும் எந்தச் சமயம் இருக்க வேணும். எந்தச் சமயம் இல்லாமல் போக வேணு மெண்டு. ஆகையால சமயபேதம் என்பதை அனைவரும் கைவிட்டு, இறைவன் அன்பு மயமானவன், இரக்கமானவன், எல்லோருக்கும் பொதுவானவன் எண்ட உயர்ந்த சிந்தனையோட எல்லோரும் செயற்பட்டால், இறைவன் நிச்சயம் எல்லோருக்கும் அருள் பாலிப்பான். இது தான் எனக்குத் தெரிந்தது.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் மூச்சுவிடாமல் கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** வாத்தியார் சொல்லுறது முற்றிலும் உண்மை. ஒரு காலத்தில எங்கட தலையில உக்ரைன் நாட்டுக் கூலிப் படை குண்டு போட்டினம்.

இஸ்ரேலின்ர மொசாட் எங்கள் இனத்தை அழிக்க வியூகம் அமைத்துக் கொடுத்தது. சகடையும், பொம்மர்களும், உலங்கு வானூர்திகளும் எங்கட தமிழ் மக்கள் மீது குண்டு போட்ட போது எங்கட மக்கள் பட்ட வேதனை கொஞ்சமோ.

இந்தாப்பாருங்க இப்ப அந்த நாடுகளில குண்டு வெடிக்குது. கட்டடங்கள் தரைமட்டமாகுது.மனித உயிர்களைக் காவு கொள்ள அந்த நாடுகள் துடிக்குது. இரக்கமற்ற அந்த நாடுகளால மனித குலம் அழியுது.அது இப்ப தான் எல்லோருக்கும் புரியுது தன்வினை தன்னைச் சுடும் எண்டு.

**கங்காணியார்:-** அதுசரி, கொழும்புக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்திக்கிறதுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பினதாம்.இருந்தும் அவர்களுடன் சந்திப்பை நடத்த ஜெய்சங்கர் விரும்பவில்லை எண்டு கேள்வி.

ஓ! இவையளோட சந்தித்து என்ன பலன் எண்டு அவர் நினைச்சிருப்பார். அதால சந்திப்புத் தேவையில்லை எண்ட முடிவுக்கு வந்திருப்பார். அது தான் நடந்திருக்கும்.

இவ்வாறு கங்காணியார் கூற, அதனைத்தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❝ விடுதலைப்புலிகள் தமிழ் மக்கள் விடுதலைக்காய் போராடியது போல இஸ்ரேலை எதிர்த்து கமாஸ் போரிடுகிறது. ஏன் அவர்களை தீவிரவாதிகள் என்று கூறுகிறார்கள்?

சுதன்-குப்பிழான்

❝ போராட்டங்களினாலும் கதவடைப்பினாலும் பயன் இல்லை என்கிறார்களே? பிறகேன் அவற்றை மேற்கொள்கிறார்கள்?

சிவம்-வதிரி

### சுதன்- குப்பிழான்

**விடுதலைப்புலிகள் தமிழ் மக்கள் விடுதலைக்காய் போராடியது போல இஸ்ரேலை எதிர்த்து கமாஸ் போரிடுகிறது. ஏன் அவர்களை தீவிரவாதிகள் என்று கூறுகிறார்கள்?**

நாம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு விடுதலை இயக்கம் என்றால் தன் நாட்டு மக்களுக்காக போரிடுவதுடன் பிற நாட்டு மக்களின் உயிர்களை அழிக்கும் செயலில் ஈடுபடக்கூடாது.
விடுதலைப்புலிகள் அந்த விடயத்தில் நிதானம் கடைப்பிடித்தனர் என்பதுதான் உண்மை.
ஆனால் கமாஸ், இஸ்ரேல் மக்கள் மீது கொடும் தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டப்படுகிறது.
விடுதலைக்காகப் போரிடும் ஒரு அமைப்பு தனது எதிரிகளைத் தவிர்த்து ஒரு அப்பாவியையேனும் கொல்லுமாக இருந்தால் அந்த அமைப்பின் அடிப்படை வாதம் பிழைத்துவிடும் என்பதே மெய்.

### திகான்-வடமராட்சி

**2009 இற்குப் பின் வடகிழக்கில் பல பிரச்சினைகள் தோன்றும் என நீங்கள் சிந்தித்ததுண்டா?**

வன்னிப் பெரும் போர் முடிவுற்று பயங்கரவாதத்தை அழித்துவிட்டதாக அரசு அறிவித்த அடுத்தகணம் இனி இந்த நாட்டில் எல்லாம் தலைகீழாகும் என நாம் இவ்விடத்தில் பதிவிட்டிருந்தோம்.
அதன் பின்னர் பல தடவைகள் அரசின் திட்டமிட்ட போதை விதைப்பு தொடர்பில் இவ்விடத்தில் கடுமையான பதிவுகளை மேற்கொண்டிருந்தோம்.
ஆனாலும் பயன் ஏதும் இல்லை. வடக்கு-கிழக்கு இளைஞர்கள் இனி போராட்டம் தொடர்பில் சிந்திக்கக் கூடாது என்பதற்காக அரச இயந்திரங்கள் எடுத்த ஆயுதம் போதைவஸ்து. இன்று அது மிகத் தீவிரம் பெற்று அழிவின் விளிம்பில் நிற்கிறது.

### மதுவன்-மீசாலை

**முதலைக்கு நான்கு கண்கள் என சிலர் கூறுகிறார்களே உண்மையா?**

யாரோ உங்களுக்கு அடித்து விட்டிருக்கிறார்கள். அது முற்றிலும் பொய். யாரும் பொய்க்கு அழுதால் நாம் முதலைக் கண்ணீர் விடுகிறார்கள் என்று கூறுவோம் அல்லவா? உண்மையில் முதலைகள் அழுவதில்லை. நீரில் இருந்து நிலத்திற்கு வந்ததும் தனது கண்களை சுத்தம் செய்வதற்காக ஒரு சுரப்பியை சுரக்க வைக்கிறது.
அதில் வரும் நீர் அதன் கண்களை சுத்தம் செய்கிறது. இதை விட முதலையின் கண்களில் மூன்று இமைகள் உண்டு. இதன் மூலமே அது நீரிலும் நிலத்திலும் பார்வைத் திறனை பெற உதவுகிறது.

### ரஞ்சித்-மானிப்பாய்

**இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிக்குகள் விரும்புகிறார்கள் இல்லையா?**

தமிழினத்தின் மீதான அடக்குமுறைகளையும் அவர்களுக்கு பெரும் பான்மை புரியும் அட்டூழியங்களையும் உணர்ந்து கொண்ட பல பிக்குகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் பேச முடியாது. அப்படிப் பேசினால் அவர்களை துரோகி என்றும் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதைகளைக் கொடுக்க மாட்டார்கள் என்ற பயம்.
ஆனால் இனவாதத்தை கக்கும் செயல்களில் ஈடுபடும் பிக்குகள் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களை ஆதரிக்கும் பெரும்பான்மையினரும் இருக்கவே செய்கின்றார்கள்.

### சிவம்-வதிரி

**போராட்டங்களினாலும் கதவடைப்பினாலும் பயன் இல்லை என்கிறார்களே? பிறகேன் அவற்றை மேற்கொள்கிறார்கள்?**

வெல்பவன் மட்டும்தான் விளையாட்டில் ஈடுபட வேண்டும் என்றால் அந்த விளையாட்டில் ஒருவரே விளையாடுவார்.
தோற்பது உறுதி என்று தெரிந்தும் விளையாடுகிறேன் என ஒரு வீரன் கூறுகிறான் எனின் நிச்சயம் அவன் வீரனே இல்லை.
நான் தோற்கவில்லை. வெற்றிக்காகப் போராடினேன். நான் தோற்றது கோழையிடம் அல்ல வீரனிடம் என்று ஒருவன் கூறுவான் ஆயின் அவனே சிறந்த வீரன்.
அரசு எமது உரிமைகளை தர மறுக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எமது கடமை. இல்லையேல் நாம் இந்த நாட்டில் வாழ்வது தகுதியற்றது.

### ராஜ்-மந்திகை

**இனம் இனத்துடன் சேரும் என்கிறார்கள். பிறகேன் எம்மவர்கள் பிரிந்து நிற்கிறார்கள் வியாசரே?**

உலகில் மனித இனம் ஒன்று தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள ஒன்றிணையாமல் பிரிந்து நிற்கிறது என்றால் அது தமிழினம் மாத்திரமே.
அந்தளவிற்கு தமிழினத்திடம் இன ஒற்றுமை அற்றுப் போய்விட்டது. அதற்காக தமிழினம் ஒன்றும் இனப்பற்று இல்லாத இனமல்ல.
ஒரு காலத்தில் தனது இனத்தின் விடிவுக்காக தன்னையே தீயுடன் சங்கமித்த இனம், இன்று சுயநலம் மிக்க தமிழ் அரசியல் தலைவர்களின் குடைக்குள் அகப்பட்டு தரித்திரம் பிடித்த இனமாக மாறி வருகிறது.
என்ன சொல்வது. மேய்ப்பான் இல்லாத ஆடுகள் போல் நல்ல தலைவனை இழந்து தவிக்கிறது தமிழினம்.



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்:தர்மம் தலை காக்கும்
இசை:கே.வி.மகாதேவன்
பாடகர்கள்:டி.எம்.சௌந்தரராஜன்
இயற்றியவர்:கண்ணதாசன்



*மலை போலே வரும் சோதனை யாவும்*
*பனி போல் நீங்கி விடும்*
*நம்மை வாழவிடாதவர் வந்து நம்*
*வாசலில்*
*வணங்கிட வைத்து விடும்*

**தர்மம் தலை காக்கும்**
**தக்க சமயத்தில் உயிர் காக்கும்**
**கூட இருந்தே குழி பறித்தாலும்**
**கூட இருந்தே குழி பறித்தாலும்**
**கொடுத்தது காத்து நிக்கும்...**
**செய்த தர்மம் தலை காக்கும்**
**தக்க சமயத்தில் உயிர் காக்கும்**

**மலை போலே வரும் சோதனை யாவும்**
**பனி போல் நீங்கி விடும்**
**மலை போலே வரும் சோதனை யாவும்**
**பனி போல் நீங்கி விடும்**
**நம்மை வாழவிடாதவர் வந்து நம் வாசலில்**
**வணங்கிட வைத்து விடும்**
**நம்மை வாழவிடாதவர் வந்து நம் வாசலில்**
**வணங்கிட வைத்து விடும்**
**செய்த தர்மம் தலை காக்கும்**
**தக்க சமயத்தில் உயிர் காக்கும்**

**அள்ளிக்கொடுத்து வாழ்பவன் நெஞ்சம்**
**ஆனந்த பூந்தோப்பு..**
**அள்ளிக்கொடுத்து வாழ்பவன் நெஞ்சம்**
**ஆனந்த பூந்தோப்பு வாழ்வில்**
**நல்லவர் என்றும் கெடுவதில்லை—**
**இது நான்குமறை தீர்ப்பு...**
**வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை—**
**இது நான்குமறை தீர்ப்பு**

**தர்மம் தலை காக்கும்**
**தக்க சமயத்தில் உயிர் காக்கும்**
**கூட இருந்தே குழி பறித்தாலும்**
**கூட இருந்தே குழி பறித்தாலும்**
**கொடுத்தது காத்து நிக்கும்...**
**செய்த தர்மம் தலை காக்கும்**
**தக்க சமயத்தில் உயிர் காக்கும்**

# பற்றி எரியும் பாலஸ்தீன்:....

(7 ஆம் பக்க தொடர்ச்சி...)

போரை அவர்கள் தொடங்கினார்கள் என்று இருக்கட்டும். நாம் திருப்பித் தாக்கி, மொத்தமாக அழித்தொழிப்போம்.


இப்படியும் முடிவெடுத்திருக்கலாம் அல்லவா?

இதில் இன்னொரு விஷயம் உண்டு. முஸ்லிம் சகோதரத்துவம் என்றெல்லாம் பேசினாலும் ஷியாக்களும் சன்னி முஸ்லிம்களும் மத்திய கிழக்கில் ஒன்றுபட்டு நின்ற சம்பவங்கள் என்று சரித்திரத்தில் பெரிதாக ஒன்றும் கிடையாது. இந்த விவகாரத்தில், இரான் ஒரு ஷியா பெரும்பான்மை நாடு. பாலஸ்தீனத்து முஸ்லிம்கள் - குறிப்பாக ஹமாஸ் ஒரு சன்னி முஸ்லிம் இயக்கம். எனவே இப்போது நடப்பது உண்மையிலேயே ஒரு சரித்திரச் சம்பவம்.

இரான் ஹமாஸைப் பின்னால் நின்று ஆதரிப்பதால் இஸ்ரேலின் இன்னொரு ஜென்ம எதிரியும் அதன் அண்டை நாடுமான லெபனானில் செயற்படும் ஹெஸ்பொல்லா (ஷியா இயக்கம்) அமைப்பு, பகிரங்கமாகவே இப்போது ஹமாஸை ஆதரிக்க முன்வந்திருக்கிறது. இதனால் சிக்கல் இன்னும் பெரிதாகத்தான் வாய்ப்பு அதிகம்.

இஸ்ரேல்-பாலஸ்தீன் யுத்தம் என்று பொதுவில் பேசப்பட்டாலும் எந்த உலக வரைபடத்திலும் பாலஸ்தீன் ஒரு தனி நாடாகக் காட்டப்படாது. ஏனெனில், இக்கணம் வரை அது தனி நாடாக அங்கீகரிக்கப்படவில்லை.

சென்ற நூற்றாண் டின் முதல் நாற்பது ஆண் டுகள் வரை, அது அரபு மண்ணாகத்தான் இருந்தது. இரண்டாம் உலகப் போரின் விளை வுகளுள் ஒன்றாக யூதர்களுக்குத் தனிநாடு என்று ஆரம்பிக்கப் போக 1947 ஆம்ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை ஒரு திட்ட வரைவை முன்வைத்தது. அதே நிலம்தான். கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி யூதர்களுக்கு மீதிக்கு மீதி பாலஸ்தீனியர்களுக்கு என்று படம் வரைந்து காட்டினார்கள்.



1948 இல் இஸ்ரேல் தனி நாடாக அறிவிக்கப்பட்டது. அது பிரிட்டன் சகாயத்தால் நடந்தது. அவ்வளவுதான். அதன் பிறகு அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அரேபியர்களைத் தாக்கி, நிலங்களை அபகரித்து, மொத்த பரப்பளவையும் இஸ்ரேல் என்று ஆக்கிக்கொண்டார்கள்.

இன்றைக்கு பாலஸ்தீன் என்பது தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்படும் ஒரு நிலப்பரப்பு மட்டுமே. அதிலும் மேற்குக் கரை என்று சொல்லப்படுகிற ஜோர்டன் நதிக்கரை ஓர நிலப்பரப்பு கொஞ்சம். அந்தப் பக்கம் காஸா என்கிற இன்னொரு கைக்குட்டையளவு நிலப்பகுதி. அதில் கால்வாசி எகிப்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும். இந்தப் பாலஸ்தீனத்தை மம்மூத் அப்பாஸ் என்பவர் ஆள்கிறார். பிரசிடெண்ட் என்றுதான் சொல்வார்கள். தனி நாடு போலத்தான் தெரியும். ஆனால் ஐ.நா இன்னும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கவில்லை. ஐ.நா-வின் 193 உறுப்பு நாடுகளுள் 139 நாடுகள் மட்டுமே பாலஸ்தீனை அங்கீ கரித்திருக்கின்றன. இப்போதைக்கு 'non-member observer state' என்று குத்துமதிப்பான, உபயோகமில்லாத அந்தஸ்து கொடுத்து உட்கார வைத்திருக்கிறார்கள்.

பாலஸ்தீனியர்கள், 1967ஆம் ஆண்டு யுத்தத்துக்கு முன்னால் தங்கள் நிலப்பரப்பு என்னவாக இருந்ததோ, அதை அப்படியே கேட்கிறார்கள் (பார்க்க: வரைபடம்). போர் செய்து தான் பிடித்து வைத்திருக்கும் பாலஸ்தீனத்து நிலப்பரப்பில் அரை அங்குலத்தைக் கூட விட்டுத் தர இஸ்ரேல் தயாராக இல்லை.

பாலஸ்தீனத்தை ஆளும் தரப்பும் அதைத்தான் கேட்கிறது, அங்கே காஸாவில் தனியாவர்த்தனம் செய்துகொண்டிருக்கும் ஹமாஸும் அதைத்தான் கேட்கிறது. சிக்கல் என்னவென்றால் மம்மூத் அப்பாஸ் தரப்புக்கு ஹமாஸ் ஆகாது. பாலஸ்தீன் விடுதலை முன்னணியும் அதன் நட்பு இயக்கங்களும் ஒரு பக்கம் என்றால் ஹமாஸ் தனிப் பக்கம். என்னதான் காஸாவும் மம்மூத் அப்பாஸின் சமஸ்தானத்துக்கு உட்பட்ட நிலப்பரப்பு என்றாலும் அங்கே ஹமாஸ் வைத்ததுதான் சட்டம்.

மம்மூத் அப்பாஸ் வகையறாக்களின் அரசியல் ரீதியிலான நடவடிக்கைகள், ராஜதந்திரங்கள், பேச்சுவார்த்தைகள், அமைதி நடவடிக்கைகள் எதுவும் ஹமாஸுக்கு உடன்பாடானவை அல்ல. இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை என்பதை அடியோடு நிராகரிக்கும் அமைப்பு ஹமாஸ். இஸ்ரேலை ஒரு நாடாகவே அவர்கள் ஏற்பதில்லை. அப்பாஸோ, எதையாவது செய்து பாலஸ்தீன் என்கிற தனிச் சுதந்திர நாட்டைக் கண்டுவிட மாட்டோமா என்று போராடிவரும் குழுவினரின் தலைவர்.

பாலஸ்தீனியர்களின் தன்னிகரற்ற தலைவராக இருந்து இறந்து போன யாசிர் அரஃபாத்தும் அப்படித்தான். ஒஸ்லோ ஒப்பந்தம் அது இது என்று என்னென்னவோ செய்து பார்த்துத் தோற்றவர். அவரது வழி, வேலைக்கு ஆகாது என்பதே ஹமாஸின் நிலைப்பாடு. அடி அல்லது அழி. இரண்டில் ஒன்று.

போர் போன்ற ஒன்று மீண்டும் தொடங்கிவிட்டது. இரான் பின்னால் இருக்கும் வரை ஹமாஸால் இந்தப் போரைத் தொடர முடியும். ஆனால் இஸ்ரேலின் பாதுகாவலனான அமெரிக்கா இரானை அப்படியெல்லாம் விட்டு வைக்குமா என்றால், வாய்ப்பே இல்லை. இப்போதுதான் அவர்கள் சவூதி அரேபியாவை இஸ்ரேலுடன் சமரசமாகப் போகச் சொல்லி ஆற்றுப்படுத்தி ஓய்ந்திருக்கிறார்கள். இரான் மீதான தடைகள், எச்சரிக்கைகள், மிரட்டல் கள் எல்லாம் இனி வரிசையாக வரும். போர் அபாயம் வரை அது போகுமானால் இரான் பின்வாங்கவேண்டி வரலாம். இரான் அடங்கிப் போனால் ஹெஸ்பொல்லாவும் வாலைச் சுருட்ட வேண்டி வரும். அப்போது ஹமாஸ் தனித்து விடப்படும்.

அனைத்தையும் இணைத்து யோசித்தால் இது ஒரு முழு நீள யுத்தமாகும் சாத்தியத்தைக் காட்டிலும், பாலஸ்தீனியர்கள் குறுகிய காலத்தில் நிறைய இழப்புகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையே வரும் என்று தோன்றுகிறது. அவர்களது சுதந்திர பாலஸ் தீன் கனவு நனவா கும் நாள் இன்னும் சிறிது ஒத்திப் போடப்படும்.

பரிதாபப்படுவது தவிர செய்வதற்கு வேறு ஒன்றுமில்லை.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசாங்கத்தை கேள்வி கேட்காத முரளி

**ஈழப்போர் உள்ளிட்ட பல விடயங்களைக் காட்டும் படம், இலங்கை அரசு குறித்து ஒரு காட்சிகூட வைக்காதது ஏன்? முரளிதரன் ஈழப் போராளிகளை மட்டும் கேள்வி கேட்பது ஏன் என அரசியல் சார்ந்து பல சிக்கல்கள் எட்டிப் பார்க்கின்றன.**

இலங்கை உள்நாட்டுப் போரால் பாதிக்கப்படுகிறது. பிஸ்கட் தொழிற்சாலை வைத்திருக்கும் முத்தையாவின் குடும்பம். அவரின் மகன் முரளிதரனுக்கு கிரிக்கெட்டில் ஆர்வம். நாட்டின் போர் நிலை உள்ளிட்ட பல அரசியல் பிரச்சினைகளைக் கடந்து கிரிக்கெட் களத்தில் கால் பதிப்பவரைச் சுற்றி வளைக்கிறது 'பௌலிங் வீசாமல் பந்தை எறிகிறார்' என்ற சர்ச்சை. பிரச்சினைகளைக் கடந்து 800 டெஸ்ட் விக்கெட்டுகள் என்ற மைல்கல்லை அவர் அடைந்த கதை தான் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்று '800' திரைப்படம்.

அதே தனித்துவ பௌலிங் ஆக்‌ஷன், அதிர்ந்து பேசாத குரல் என முரளியாகவே மாறி நிற்கிறார் நாயகன் மதுர் மிட்டல். நடிப்பிலும் தூஸ்ரா வீசி, தமிழில் தன் வரவைப் பறைசாற்றியிருக்கிறார்.

அப்பாவாக வேலராமமூர்த்திக்கு அதே டெம்ப்ளேட் வேடம்தான். முரளிதரனின் மனைவியாக வரும் மகிமா நம்பியாருக்கும் பெரிதாகக் காட்சிகள் இல்லை. கபில்தேவ், ஷேன் வார்னே தொடங்கி பல்வேறு கிரிக்கெட் வீரர்களின் நகல்களாக நடிகர்கள் வந்துபோகிறார்கள்.

அவற்றுள் கிங் ரத்னம் அச்சுஅசலாக அர்ஜுனா ரணதுங்காவைப் பிரதியெடுத்து நம் நாஸ்டால்ஜியா நினைவுகளுக்கு உயிர்கொடுக்கிறார்.

முரளியின் ஆரம்பகால வாழ்க்கை, கடைசி டெஸ்ட் போட்டி என இருவேறு காலகட்டங்களைக் குழப்பமின்றி இணைத்திருக்கிறது படத்தொகுப்பு.

முரளிதரனின் வாழ்வில் நடந்த அத்தனை நிகழ்வுகளையும் திரையில் காட்ட முற்பட்டிருக்கிறது. இதனாலேயே பல நெகிழ்ச்சியான காட்சிகளை அவசரமாகக் கடக்கிறது திரைக்கதை. 'பந்தை எறியும் சர்ச்சை'இல் பேசப்படும் தரவுகளுக்கும் விவாதங்களுக்கும் போட்டிருக்கும் உழைப்பு பாராட்டத்தக்கது.

ஈழப்போர் உள்ளிட்ட பல விடயங்களைக் காட்டும் படம். இலங்கை அரசு குறித்து ஒரு காட்சிகூட வைக்காதது ஏன்? முரளிதரன் கூட ஈழப் போராளிகளை மட்டும் கேள்வி கேட்பது ஏன் என அரசியல் சார்ந்து பல சிக்கல்கள் எட்டிப் பார்க்கின்றன.

சமகால கிரிக்கெட்டரின் வாழ்வைச் சொல்லும் இந்த நாஸ்டால்ஜியா சினிமா சிக்ஸரும் அடிக்கவில்லை. டக் அவுட்டும் ஆகவில்லை.

# காலம் கடத்தும் ஆட்சி பீடம்

இலங்கை சுதந்திரம் பெற்ற காலங்களில் இருந்து இன்றுவரை இனங்களுக்கிடையிலான முரன் முடிந்தாய் இல்லை.

பெரும்பான்மை அரசுகளின் சுயநலப் போக்கின் வெளிப்பாடே இன்றைய இலங்கையின் நிலைக்குக் காரணம் எனலாம்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இலங்கை அரசுக்கு எதிராகப் போரிடுவதற்கான காரணங்களும் அதுவே.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை உணர்ந்திடாத சிங்கள மக்களிடம் அவர்கள் இலங்கை முழுவதையும் கேட்கிறார்கள் அதற்காகவே போரிடுகிறார்கள் என்ற தவறான தகவலை சிங்கள மக்கள் மனங்களின் விதைத்தது பேரினவாத அரசு.

இதுவே சிங்கள மக்கள் தமிழினம் மீது வெறுப்புக் கொள்ளக் காரணமானது.

அதன் பின்னர் வந்த அத்தனை பெரும்பான்மை ஆட்சியாளர்களும் தமிழினத்துக்கு எதிரான செயற்பாடுகளிலேயே தீவிரம் காட்டினர்.

இதற்கு தமிழ் மக்கள் மீது காலம் காலமாக அரச படைகள் மேற்கொண்டிருந்த கொடும் தாக்குதல்கள் சான்றாகின்றன.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்க்கும் உபாயங்களைக் கையாள்வதற்குப் பின் நிற்கின்றனர். அது இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதான் உண்மையானது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினத்தை மொத்தமாய் அழித்துவிட்டு பயங்கரவாதத்தை அழித்துவிட்டதாய் அறிவித்த அரசாங்கம் அதன் பின்னரேனும் தமிழினத்திற்கான தீர்வைத் தந்ததா என்னின் இல்லை என்பதே முடிவாகும்.

நாட்டில் என்றுமில்லாத பிரகண்டங்களைச் சந்தித்த இலங்கை வரலாற்றில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான விடயம் அதிசயத்திலும் அதிசமே.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் நான் இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்ப்பேன். அதுவரை ஓயமாட்டேன் என்று கூறினார்.


ஆனால் அவர் பெறுப்பேற்றதன் பின் அதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்வில்லை என்பது நிதர்சனம். இவை ஏன் என்று உற்று நோக்கினால் சிறுபான்மை இனங்களுக்கான உரிமைகளைக் கொடுக்க பெரும்பான்மை அரசுகளுக்கு விருப்பம் இல்லை என்பதே முடிவு.

ஆட்சிக்கு வரும் போது ஒரு பேச்சும். ஆட்சி அமைத்த பின்னர் வேறு ஒரு பேச்சும் என்ற நடைமுறை தமிழினத்துக்குத் தெரிந்த நடைமுறையே.

அதனால் தமிழினம் இது தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.


ஏனென்றால் ஏற்கனவே ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டார்கள்; அதன் விளைவு இனியும் ஏமாற்றுவார்கள் என்பதே முடிவு.

■ அபிமன்யு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையெனும் தேன்



கவியெழுதும் கண்மணியாய்
காற்றில் மிதக்கிறேன்
காரணம் ஏதுமின்றி
கண்மூடி நடக்கிறேன்
கனவோடு வாழ்ந்து கொண்டு
கலைந்து போன மேகமாய்
கண்ணீரில் கனவுகள் கரைய
தரைமேல் தவிக்கும் மீன்போல்
தவிப்பறிந்தும் புன்முறுவலாய்
என் உதடுகள்
துன்பங்கள் மறந்த பட்டாம
பூச்சியாய் வாழ்வேனென
கவிதை மலர் தேன் பருகி
பறந்திடுவேன்

யுதுவானி,வவுனியா.

## போரை நிறுத்து! போரை நிறுத்து!

மனித மாண்பினை அவமதிப்போரை
ஈனச் செயல்கள் செய்திருப்போரை
உயிரை உலகை இயற்கையை அழிப்போரை
இரங்கி வேண்டுவோம்! போரை நிறுத்து

அப்பாவி உயிர்களைக் கொன்றொழிப்போரை
தப்பாமல் அதர்மம் செய்திருப்போரை
மொழியை இனத்தை நாட்டை அழிப்போரை
சமாதானம் வேண்டினோம் போரை நிறுத்து

அன்பைக் காட்டி அறிவை வளர்ப்போரை
வன்செயல் செய்யாது மகிழ்ந்திருப்போரை
என்றும் இறைவனை மறப்பாதிருப்போரை
காத்திட வாரீர் போரை நிறுத்து

இஸ்ரேல் பாலஸ்தீன போரை வள்ர்ப்போரை
உக்ரேன்- ரஷ்யா உறவை மதிப்போரை
யுத்த வெறியினை முடுக்கி வளர்ப்போரை
வேண்டுவம் யாமே போரை நிறுத்து!



எஸ்.சிவானந்தராஜா,பண்டத்தரிப்பு.


## வெண் பிரம்பு

கண் நரம்புதான் கண் நரம்புதான்
வெண் பிரம்பு !
கண்ணை இமைகள்
காப்பதினை போலே
எம்மை பாதுகாக்க வந்தது
அசையும் திசைகள் எங்கும்
முன் சென்று வழிகாட்டுது
அசையாத கல்
போன்ற மனிதர்களையும்
அசைய வைக்கும்
ஆற்றல் கொடுக்குது
கண்ணானது பேச்சானது
எம் மூச்சானது
கண்பார்வை அற்றோரின்
அங்கமானது அடையாளமானது
உருவத்தை பார்த்து
பருவத்தை பார்த்து
பழகுகின்ற பேதங்கள்
எதுவும் இல்லாதது- எம்
உள்ளத்தை அறிந்த
உணர்வுகளை புரிந்த
எம்முயிர் தோழன் போன்றது
வீணான அச்சத்தையும்
மனத்தளர்வினையும் போக்கியே
அமைதியையும்
மன மகிழ்சியையும்
தந்து என்றும் எம்முடன் வாழ்கிறது



பொ. பிரபாகரன்,புத்தூர்.

## மௌனத்தின் தேடல்-690




## பேச்சும் மூச்சும்

பாதுகாப்புத் தொடர்பில் பாரபட்சமென்றால்
பாரதூரமான செயலாகும்
பாரம்பரியத்திற்கும் பாரிய ஆபத்தானது
காரியங்களும் கை கூடாது
எழுத்துச் சுதந்திரம் எழுந்து நடக்காது
பேச்சு சுதந்திரமும் மூச்சும் விடாது
உள்வாரியென்றும் வெளிவாரியென்றும்
பேச்சு வார்த்தையும் இழுபட்டு செல்லும்

ச.வரதலிங்கம்.சாவகச்சேரி.

## மௌனத்தின் தேடல்- 691



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## காத்திருப்பு

உடுத்தியதும் வெண்மை
எழுதுகோள் முனை உருளும்
தாளும் வெண்மை
சுதந்திரமின்மை அது தான் உண்மை
கொடுத்தவனுக்கும் முடித்தவனுக்கும்
கிடைத்தது முடிந்தது
காலத்தின் பதிலுக்காக
காத்திருக்கும் நாம்...

அருண்.

## உண்மையும் உரிமையும்

பலத்த பாதுகாப்பு பரீட்சையைப்
பாதிக்குமா!
அபிப்பிராயங்கள் நிலவும்
அரசியல் போன்று
இரு வேறாயிருக்கும்இருந்தாலும்
உளவியல்உண்மையைக் கூறும்
உரிமைகள் உயிர் வாழ்வதை
உறுதிப்படுத்தி கவனிக்கும்
எழுது கோள் தான்
பெரும் சங்கடத்தில்

க. நாகராசா ,புணாவில்.

## கல்வியின் சிறப்பு

இளமையிற் கல்வி
சிலையில் எழுத்து
என்பதிற்கமைய
கல்விக்குத் தடையாக
எத்தனை தடைக்கற்கள்
வந்திடினும் அக்கற்களையே
படிக்கற்களாக்கி
மிதித்து வந்து எச்
சூழ்நிலையிலும்
கலங்காதிருந்து
கற்றுத் தெளிதலே
கல்வியின் சிறப்பு

சி . மகாலட்சுமி,
கொக்குவில்.

## கல்வியே அழகு

மரத்தின் நிழலிலும்
மண் தரையிலும் சரி நாம்
மகிழ்ந்து கற்றிட வேண்டும் கல்வி தனை
பாதகர் எம்மை அடிமையாக்க
நினைத்திட்ட போதும்
பாதுகாப்புடன் பெற்றிடுவோம்
படிப்பு தன்னை
படிப்போடு பட்டம் பெற்று
பாரினிலே உயர்ந்து
படிப்பின் மகிமை தன்னை
உரைத்திடுவோம்

ஆ.செல்வி,

## வெருட்டியடக்கு

அச்சுறுத்தலும் அடக்கலும்
அருகில் காவலிருக்க
கல்விச் செயற்பாடென்ன
சுமுகமான வாழ்வும்
பாதிக்கப்படும் என்பது
ஆழ்வோர் அறியாததல்ல
ஆனாலும் குடிமக்களிடம்
அச்சமும் பீதியுமிருந்தாலே
ஆழ்வோராய்
தொடரலாமென
ஆதிக்கர் எண்ணுவதாகும்

சி.இ. அன்புதுரை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா

"உனக்குப் புத்திமாறாட்டம் ஏற்பட்டிருக்கிறது" என்றான் இளைய பல்லவன் கோபத்துடன்.

"புத்திமாறாட்டமாயிருந்தால் மிகவும் மகிழ்ச்சியடைவேன்."

"ஏன்?"

"வேறொருத்தியை நீங்கள் விரும்பவில்லையென்பதற்கு அத்தாட்சியாகும்."

இளையபல்லவன் பதிலேதும் சொல்லாமல் தலைகுனிந்து கொண்டான். மஞ்சளழகி சொல்வதில் உண்மை பெரிதும் நிரம்பிக் கிடந்ததை அவன் உணர்ந்தான். காஞ்சனாதேவியும் அந்தச் சமயத்தில் அவன் மனக்கண் முன்னே எழுந்து இடிஇடியென நகைத்தாள்.

"உங்களிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டேன். இருப்பினும் உங்களை இங்கு நிறுத்திக் கொள்ள நான் இஷ்டப்படவில்லை. சீக்கிரம் இந்த அக்ஷயமுனையை விட்டுப் போய்விடுங்கள்." என்று அவள் ரகசியமாகச் சொன்னாள்.

"ஏன்?" வியப்புடன் கேட்டான் இளையபல்லவன்.

"இல்லையேல் என்னை மணந்து கொள்ளும்படியாயிருக்கும்." என்றாள் அவள்.

"மணந்து கொள்ளாவிட்டால்?" சிரித்துக் கொண்டே கேட்டான் அவன்.

"சிரிக்காதீர்கள். விளைவு பெரும் விபரீதம்" என்ற அவள் கண்ணில் பயம் தாண்டவமாடியது.

"என்ன விபரீதம்?" என்று கேட்டான் இளையபல்லவன்.

அவள் சற்றே நடுங்கினாள். "நினைப்பதற்கே என் உடல் நடுங்குகிறது. சொல்ல நா எப்படி எழும்?" என்ற கேட்டாள் அவள்.

"சொல்" என்று இளையபல்லவன் அழுத்திக் கேட்டான். "என்னைப் பார்ப்பதுபோல் அந்தப்படகுகளின் மறைவைக் கவனியுங்கள்," என்றான் அவள், படகுகள் இருந்த பகுதியில் கண்களை ஓட்டி.

படகுகளிருந்த இடத்தை திரும்பிப் பார்த்தான் இளையபல்லவன். அது வரை படகுகளின் மறைவிலிருந்த ஓர் உருவம் எழுந்து விடுவிடுவென்று மணலில் நடந்து சென்றது.

"அது!" ஒரே சொல்தான் இளைய பல்லவன் வாயிலிருந்து கிளம்பியது.

"ஆமாம்!" என்ற ஒற்றைச் சொல்லையே பதிலாகச் சொன்னாள் மஞ்சளழகி. பதிலில் பெரும் திகில் மண்டிக் கிடந்தது. திகிலுக்குக் காரணம் அவனுக்குப் புரியவில்லை. அவனை எதிர்நோக்கியிருந்த பெருத்த அபாயத்தை அவள் விளக்கினாள். "அப்படியொரு பழக்கம் இங்கு உண்டா?" என்று இளையபல்லவன் வினவினான்.

"உண்டு." என்றாள் அவள்.

அவள் மட்டுமல்ல, வரலாற்றுச் சதுரங்கத்தில் தானும் ஒரு காய் என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான் இளையபல்லவன்.




காலத்தின் பதிவு 81

## சதுரங்கக் காய்கள்

### பெண் ஜென்மம்

மஞ்சளழகியின் செவ்வரி விழிகள் கடலை நோக்க, உடலும் உள்ளமும் நெருங்க இருவரும் உட்கார்ந்திருந்த அந்த இன்பநிலையிலும் திடீரென அவள் உடல் லேசாக நடுக்கமெடுத்ததையும் "என்னை மணக்காவிட்டால் பெரும் விபரீதம் நேரிடும்" என அவள் சோகம் நிறைந்த சொற்களை உதிர்த்ததையும் கவனித்த இளைய பல்லவன் அவளுக்கு ஆறுதலூட்டத் தன் இரு கைகளாலும் அவள் இடையே இறுக்கிப் பிடித்தானாலும் அந்தப் பிடியிலும் ஆறுதலடையாத அந்த அக்ஷயமுனை அழகி "அதோ அந்தப் படகுகளின் மறைவைக் கவனியுங்கள்" என எச்சரிக்கவே அந்தப் பகுதியை நோக்கிக் கண்களைத் திருப்பினான். கண்களைத் திருப்பியவன் அந்த மறைவிலிருந்து ஓர் உருவம் எழுந்ததைக் கவனித்தது மட்டுமின்றி, அந்த உருவம் யாரென்பதைக் கண்டு கொண்டானாகையால் மஞ்சளழகியின் அச்சத்துக்கு ஓரளவு காரணமிருக்கிறதென்பதையும் புரிந்து கொண்டான்.

(தொடரும்...)

# கவி வாசகம்


## நான் வைரமுத்து பேசுகிறேன்... 27

**"இறைஅனுபவம் என்பது, தெய்வம் ஒன்றையே நிலையான இன்பப் பொருளாகக் கொண்டு அதனோடு எந்த அளவுக்கு ஊன் உருக உணர்வு கனிய ஒன்றி நிற்க முடிகிறதோ அந்த அளவுக்கே ஒருவனுக்குக் கைகூடுவது."**

(பக்தி இலக்கியம், பக்கம் -89)

என்று தெரிவிக்கிறர் டாக்கடர் ப.அருணாசலம் அவர்கள்.

இந்த இறையனுபவம் பாடப்



பெறுவது இரண்டு வகை.

முதலாவது -உலகியல் வட்டத்திலிருந்து பாடுதல்.

இரண்டாவது - இறை வட்டத்திலிருந்து பாடுதல்.

உலகியல் வட்டத்தினின்றும் பாடுவது பொதுஅனுபவப்பாடல்.

இறை வட்டத்திலிருந்து பாடுவது தன்அனுபவப் பாடல்.

**"பக்தி செலுத்துவதன் நோக்கம் – அல்லது பக்திப் பாடலின் நோக்கம் அழும் ஆன்மாவினை உலகியல் வட்டத்திலிருந்து மீட்டு, இறை வட்டத்திற்கு இட்டுச் செல்வதே."**

அழும் ஆன்மாவினை மீட்கவும் அதனை இறையுலகில் சேர்க்கவும் துணை நிற்கிற பக்திப் பாடல்களில் மாணிக்கவாசகரின் இறையனுபவத்தை இன்னோர் கவிஞன் எளிதில் எட்டிவிட முடியாது என்பர் சமய அறிஞர்.

இறையனுபவத்தில் ஒரு பக்தி மனம் நுழைந்து திளைத்துக் களித்து நெகிழ்வதற்கேற்ப திருவாசகத்தின் சொற்கள் அவிழ்ந்து மலர்ந்து நெகிழ்ந்து கிடக்கின்றன.

இறைமையோடு திருவாசகம் கொண்ட நெருக்கத்திற்கும் அதனுள் பொதி தந்து வழியும் உருக்கத்திற்கும் இரண்டு காரணங்கள் எடுத்துக்காட்டலாம்.

முதலாவது - அடிமனத்தின் தனிமைத் தளத்தில் இறைமையோடு கலந்து விட்ட இன்பத் திளைப்பு.

இரண்டாவது அவ்வின்பத் துடிப்பு தொடர்ந்து கிடாத இடையீட்டில் ஏற்பட்ட மனத்தவிப்பு.

இவ்விரண்டுமே திருவாசகத் திற்குப் பாடுபொருளாயின.

51 உட்பிரிவுகள் கொண்ட 650 திருவாசகப் பாடல்களும் இந்த இரண்டு வேரிலிருந்து கிளைத்த வைகளே.

**"இறையியல் வட்டத்தை எய்துவதற்கு உலகியல் வட்டத்திலிருக்கும் ஏழை ஆன்மா மூன்று நெறிகளை மேற்கொள்கிறது.**

**1. கர்ம யோகம் - அது அனுட்டான நெறி.**

**2. பக்தி யோகம் - அது அன்பு நெறி.**

**3. ஞான யோகம் - அது அறிவு நெறி அல்லது தத்துவ நெறி.**

(தமிழில் இலக்கியக் கோட்பாடுகள்: பக் 40) என்று குறிப்பிடுகிறார் டாக்டர் முத்துச் சண்முகம்.

இம்மூன்றினுள் மாணிக்கவாசகர் கொண்ட நெறி இரண்டாம் நெறியாகிய அன்பு அல்லது பக்தி நெறியாகும். உள்ளார்ந்த உள்ளுணர்ச்சிகளோடு ஒன்றிக் கலந்து தன் மயமாகி நின்று பாடும் பாடல்களே திருவாசகப் பாடல்கள்.

திருவாசகத்தின் ஒவ்வொரு பாடலிலும் சொற்களைக் கடந்து அடிநாதமாக ஓர் ஏழை ஆன்மாவின் அவல முனகல், நம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

**"மெய்தான் அரும்பி**
**விதிர்விதிர்த்துன்**
**விரை ஆர்கழற்கென**
**கைதான் தலைவைத்துக்**
**கண்ணீர் ததும்பி**
**வெதும்பி உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப்**
**போற்றி சயசய**
**போற்றி என்னும்**
**கைதான் நெகிழவிடேன்**
**உடையாய் என்னைக்**
**கண்டு கொள்ளே"**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

369

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## பாட்டாவுக்கு ஒரு மடல்...


அப்பப்பா! நான் உங்களுடைய பேரன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். நான் தொலைதூர தேசத்திலே இருப்பதால் உங்கள் பூட்டனை உங்களுக்குக் காட்டமுடியவில்லையே என்ற குற்ற உணர்வு என்றும் என்னுள்ளே இருந்துகொண்டிருக்கிறது. அவனைப் பார்த்திருந்தால் நீங்கள் எவ்வளவு பூரித்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த பரந்த பூமியிலே எங்களை நிலைநிறுத்த நீங்கள் பட்ட துயரங்கள் அப்பப்பா!

அண்ட சராசரம் அளவு பரந்து விரிந்திருந்த உங்களது உலகம் கடைசிக்காலங்களில் வீடு என்ற வட்டத்துக்குள் முடங்கிப்போனபோது உங்களுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வுகளைப் புரிந்துகொண்டவர்கள் யார்?

அன்று எனது விருப்பங்களை நீங்கள் ஒவ்வொன்றாகக் கேட்பது ஞாபகம் வருகிறது. கடைசிக்காலத்திலே உங்களது விருப்பு வெறுப்புகளை எவர்தான் கேட்டார்கள்? அன்று எனக்கு தும்மல் எடுத்தாலே நீங்கள் பதறிப்போவீர்களே. ஆனால் உங்களது கடைசிக் காலத்திலே உங்களது உடல், உள சுகத்திலே நான் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தேன் என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் துயரங்கள் தெரியாத வயதிலே நீங்கள் என் வலக்கரம் பற்றி பொடி நடையாய் நடந்த தூரங்கள், பள்ளிக்கூட வாசலிலே என்னைக் கூட்டிச்செல்வதற்காகக் கறுப்புக்குடையுடன் நீங்கள் காத்திருந்த காட்சிகள், என்னைக் கண்டிக்கும் பெற்றோரிடம் எனக்காக வக்கீலாய் நீங்கள் வாதாடிய வார்த்தைகள் என எத்தனையோ நினைவுகள் நித்தமும் என் நெஞ்சில் நிழலாடும்.

உங்களது கைப்பிடிக்குள் அன்று நான் உணர்ந்த பாதுகாப்பை அதன் பின் என்றுமே உணர்ந்ததில்லை. நீதிக்குப் பெயர்போன உங்களது நேர்கொண்ட பார்வை, செங்கோல் போன்ற உங்களது கைத்தடியைப் பிடித்துக்கொண்டு நடக்கும் ராஜகம்பீர நடை, போலி கலவாத உங்களது பேச்சு, பெருமை கலவாத உங்கள் போக்கு, ஊரவரையும் உற்ற வரையும் நெறிப்படுத்துவதையே மூச்சாகக்கொண்ட உங்கள் வாழ்க்கைமுறை இவை அனைத்தும் பிற்காலத்திலே மறக்கப்பட்டுப் போனது ஏன்?



இயந்திரமாகி உருண்டோடும் இந்த உலக ஓட்டத்திலே உங்களது உள்ளுணர்வுகளைப் புரிந்துகொள்ள யாருக்கு நேரமிருந்தது? உங்களுக்கு உடம்பு முடியாமல் போன பொழுது நீங்கள் நீங்களாகவே வாழ முடியாமல் தடுத்தது ஏது? கடைசிக்காலத்தில் உங்களது சுதந்திரம் பறிக்கப்பட்டது ஏன்? வயது போனால் பிறர் விதிக்கும் வரைவிலக்கணத் திற்குள்தான் வாழவேண்டும் என்ற விதியை எழுதியது யார்?

சிறுவர்களினதும் பெண்களினதும் உரிமைகள் பற்றிப் பேசத் தான் எத்தனை அமைப்புக்கள்? எத்தனை நிறுவனங்கள்? அவர்களுக்காக குரல்கொடுக்க எத்தனை மனிதர்கள்? ஆனால் பிரயோசனங்களைப் பிழிந்தெடுத்த பின் வீசி எறியும் சக்கைகள் போல பரிதவிக்கும் முதியவர்களின் உரிமை காக்க, முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பலமான அமைப்பொன்று கூட உருவாக்கப்படாமல் போனது ஏன்?

அப்பப்பா! நீங்கள் செய்து முடித்தவை எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் செய்ய நினைத்தும் செய்ய முடியாமல் போனவை எவை என்று எனக்குத் தெரியாது. அன்று எனது ஆசைகள் ஒவ்வொன்றையும் கேட்டு நிறைவேற்றிய உங்களது நிறைவேறாத ஆசைகள் எவை என்று கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூட எனக்கு நேரமில்லாமல் போனது ஏன்?

உங்களது வாழ்வின் இறுதிப் பகுதி உறவுகளின்றி உப்புச்சப்பின்றிப் போனதற்கு யார் காரணம் உலக சுகாதார மேம்பாட்டுக்காய் எத்தனை முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும் இந்த வேளையிலே உங்களது உடல், உள, சமூக நன்னிலையைப் பற்றி சிந்திக்க யாருக்கு நேரமிருந்தது? உங்களது அந்திச் சடங்குகளுக்கு கூட என்னால் வரமுடியாது போய்விட்ட எனது துரதிஷ்டத்துக்காக எவரை நொந்து கொள்ள முடியும்? அப்பப்பா! கையாலாகாத உங்களது பேனை வழமைபோல மன்னித்து விடுங்கள்.

**Dr.சி. சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்.**

## கேள்வி-பதில்

**கேள்வி:** நான் 73 வயது டைய பெண். நான்கு வருடங்களுக்கு முன்பு நெஞ்சில் ஓரளவு வலி ஏற்பட்டபோது மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டேன். இதயத்தில் ஒரு பகுதி தடித்துள்ளதாகவும் ஒரு Silent Attack ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் உள்ளதாகவும் கூறி மருந்துகள் தந்தனர்.

அந்த மருந்துகள் வாழ்நாள் பூராகவும் பாவிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மருந்துகள் Atenolol 50mg. Atova statin 10mg. Ecosprin 75mg. Clopidogrel 75mg. கடந்த நான்கு வருடங்களாகத் தினமும் இவற்றைப் பாவித்து வருகிறேன். இடைக்கிடை தனியார் வைத்தியசாலையில் பரிசோதித்த போது எல்லாம் normalஎன்று கூறினார்கள்.

நான் உண்ணும் உணவில் உப்பு, கொழுப்பு குறைத்து காய்கறி, பழங்களை அதிகம் சாப்பிட்டு சுகமாக இருக்கிறேன். தொடர்ந்தும் இந்த மருந்துகளைப் பாவிக்க வேண்டுமா? அல்லது நிறுத்தலாமா?

**பதில்:** உங்களுக்கு உயர்குருதியமுக்கம், இருதயத்திற்கான இரத்தக்குழாய்களில் கொலஸ்ரோல் படிவு மற்றும் இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்ரோல் ஆகிய நோய்நிலைகள் இருப்பதை உங்கள் கடிதத்தின் மூலம் அறிய முடிகின்றது. நீண்டகாலமாக மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள், நீங்கள் தொடர்ந்தும் Aspirin ( Ecospirin), Atorvastatin மற்றும் Atenolol ஆகிய மருந்துகளை உள்ளெடுப்பது உங்களுக்கு எதிர்காலத்தில் இந்நோய்களால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைக்கும் என்பதை நிரூபித்து இருக்கின்றன.

இவை உங்களுக்கு மீண்டும் ஒரு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்ற இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க உதவும்.

இது உங்கள் ஆயுட்காலத்தை அதிகரிக்கும். நீங்கள் உள்ளெடுக்கும் Clopidogrel என்னும் மருந்தை வைத்தியருடன் கலந்தாலோசித்த பின் நிறுத்த முடியும்

**Dr.சி. சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆவது நாளாக தொடரும் இஸ்ரேல்-ஹமாஸ் போர்



(ஜெருசலேம்)
காசா பகுதியில் மீண்டும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்கள் நடத்த ஆரம்பித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேலிற்கும் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் அமைப்பினருக்கும் கடும் போர் இடம் பெற்று வருகிறது.

அதில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேலில் திடீர் தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினருக்கு இஸ்ரேல் இராணுவம் தக்க பதிலடி வழங்கி வருகிறது.

இந்நிலையில், கிழக்கு மற்றும் மேற்கு காசா பகுதியில் துப்பாக்கி, படகுகள் மற்றும் டாங்கிகள் மீது இஸ்ரேலிய இராணுவம் மீண்டும் பீரங்கி எறிகணைத் தாக்குதலை ஆரம்பித்துள்ளதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது:

மேலும், ஹமாஸ் அமைப்பினரால் இஸ்ரேலில் இருந்து பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டவர்கள் காசா எல்லையில் பிணங்களாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரான்ஸில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவுப் பேரணி

## வெடித்தது வன்முறை



(பாரிஸ்)
பிரான்ஸில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற பேரணியில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் வன்முறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் போராட்டக்காரர்கள் ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளதுடன் பலர் கைது செய்யப்பட்டு பாரீஸ் உள்ளிட்ட நகரங்கள் போர்க்களம் போல மாறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்ற நிலையில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களினால் காசா நகரம் உருக்குலைந்து வருகிறது.

இதேவேளை ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது சரமாரியாக வான்வழிக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் இஸ்ரேல் நகரங்களுக்குள் ஊடுருவியும் வருகின்றனர். இதனால் இரு தரப்பிலும் உயிரிழப்புக்கள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றது.

இந்த நிலையில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட பல நாடுகள் இஸ்ரேலுக்கு வெளிப்படையான ஆதரவை தெரிவித்துள்ளதுடன் உலகின் பல நாடுகளில் இருக்கும் பாலஸ்தீன மற்றும் ஹமாஸ் ஆதரவாளர்கள் இஸ்ரேலுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் போரினால் யூத விரோதம் அதிகரிக்கும் என்ற அச்சத்தினால் பல ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன ஆதரவு பேரணிகளுக்கு தடை விதித்துள்ளன. (நி)


SKYLINE WATER PROOFING
நீர்க்கசிவில் இருந்து தீர்வு வேண்டுமா?

சிறந்த இரசாயனப் பொருட்களினால் உத்தரவாதத்துடன் உங்கள் கடைகள், கோவில்கள், வில்லு மண்டபங்கள், முகட்டுக் கூரைகள், குளியலறைகள் என்பவற்றில் உள்ள நீர்க்கசிவுப் பிரச்சினைகளை தடுப்பதற்கு இன்றே கீழ்காணும் தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

(இரசாயனப் பொருட்களையும் சிறந்த விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள முடியும்)

Skyline Holders (Pvt) ltd
No 89 Old Park Road Jaffna
077 722 0095 / 076 663 6481
021 221 4994
www.skylineholders.com
skylineholders2021@gmail.com
(17458)



சேவைநலன் பாராட்டு

திரு.
சுப்ரமணியம் பரமேஸ்வரன்
(Pr.Trained, BA, PGDE, MED)



எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி இன்று (15.10.2023) ஓய்வுபெறும் ஆசிரியர் திரு.சுப்பிரமணியம் பரமேஸ்வரன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம். Best Wishes

சேவை விபரம்:- யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் 17.08.1988-24.10.1988
யா/நவக்கிரி அ.மி.த.க பாடசாலை 25.10.1988-31.12.1996
யா/தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலை 01.01.1997-31.05.1997
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 01.06.1997-14.02.2001
யா/புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயம் 15.02.2001-31.12.2003
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 01.01.2004-19.01.2014
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 20.01.2014-15.10.2023
(மொத்த சேவைக்காலம் 35 வருடங்கள்)
(17431)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.


# மீண்டும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் மலைகளில் தஞ்சமடைந்த ஆப்கான் மக்கள்

(காபூல்)
ஆப்கானிஸ்தான் நாட் டில் 4.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் மீண்டும் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் அச்சமடைந்து மலைகளில் தற்காலிக கூடாரங்கள் அமைத்து தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி 6.3 என்ற அளவிலான சக்தி வாய்ந்த நில நடுக்கம் அடுத்தடுத்து தாக்கியது.

இதில் ஹீரத் மாகாணத்தில் மட்டுமே 4 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் எனவும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்திருப்பதாகவும் அங்கு ஆளும் தலிபான் அரசு அறிவித்திருந்தது.

இந்த கோர சம்பவத்தின் நினைவுகள் மறைவதற்கு முன்பாகவே அந்நாட்டில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகிறது.

இந்திய நிலநடுக்க ஆய்வு மையம் நேற்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 4.6 அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காலை 6.30 மணி அளவில் உருவாகியுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி உணரப்பட்ட 6.1 நில நடுக்கத்தின் தொடர்ச்சியாக இந்த நிலநடுக்கம் ஏற்பட்டு இருக்கலாம் என கருதப்படுகிறது.

நேற்று ஏற்பட்ட நில நடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த தகவல்கள் உடனடியாக வெளியாக வில்லை.

ஏற்கெனவே ஏற்பட்ட நில நடுக்கத்தில் அதிகளவில் பெண்கள் உயிரிழந்திருக் கலாம் என அஞ்சப்படும் நிலையில், பாதுகாப்பு கருதியும் அடுத்தடுத்து ஏற்படும் நிலநடுக்கங்களில் இருந்து தப்பிப்பதற்காகவும் மலைப்பகுதிகளில் தற்காலிக கூடாரங்கள் அமைத்து ஆப்கானிய மக்கள் வசித்து வருகின்றனர்.

மீண்டும் தொடரும் நில நடுக்கங்களால் பெண்கள், குழந்தைகள் மற்றும் பொது மக்கள் பெரும் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா மோதல்கள் காரணமாக மசகு எண்ணெய் விலையேற்றம்

(வோஷிங்டன்)

ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போரை அடுத்து சர்வதேச சந்தையில், மசகு எண்ணெ யின் விலை நேற்றைய தினம் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. .

இதன்படி, உலக சந்தையில் WTI ரகமசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 87.69 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90.89 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.23 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி)

# மாடு திருடிய குற்றச்சாட்டில் கச்சாய் பகுதியில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

மாடு திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் இருந்து நாற்பதாயிரம் ரூபாய் பெறுமதியான மாடு ஒன்றினை திருடிக் கொண்டு சென்ற வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-30)

# சனல்-4 குற்றச்சாட்டுகளை விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி சுமத்தியுள்ள குற்றச் சாட்டுகளை விசாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளது. குறித்த தெரிவுக்குழு நியமிக்கும் பிரே ரணை நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (நி)

# புதிய வரிகளை மக்கள் மீது சுமத்த முடியாது-சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

"நாட்டு மக்கள் மீது புதிய வரிகளை சுமத்த முடியாது என்றும் வருமான வரி செலுத்தாதவர்களிடமே வரி அறவிடப்பட வேண்டும் என்றும்" நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வருமானம் ஈட்டும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவிற்கும்இடையிலான கலந்துரையாடல் ஒன்று நிதி அமைச்சில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ரஞ்சித் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "அரசாங்கம் வருவாயை அதிகரித்து விரைவாக வருமான இலக்குகளை நோக்கி நகர வேண்டும்.

மேலும் இந்நாட்டு மக்கள் மீது புதிய வரிகளை சுமத்த முடியாது. தற்போதுள்ள முறையில் வருமான வரி செலுத்தாதவர்களிடமே வருமான வரி அறவிடப்பட வேண்டும்" என அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# கொக்குத்தொடுவாய் வடக்கில் யானைகள் புகுந்து அட்டகாசம்

## நூற்றுக்கணக்கான தென்னைகளை அழித்து நாசம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட் டத்தின் கொக்குத்தொடு வாய் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைகள் மக்களின் வாழ்வாதார பயிரான தென்னை மரங் களை அழித்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு குறித்த கிராமத்திற் குள் புகுந்த காட்டுயா னைகள் தென்னந் தோட்ட செய்கையினையே வாழ் வாதாரமாக மேற்கொண்டுவரும் தெங்கு செய்கை யாளர்களின் நூற்றுக்கு மேற்பட்ட பயன்தரு தென்னை மரங்களை அழித்து நாசம் செய்துள்ளது. இராசேந்திரம் மற்றும் சிவலிங்கம் ஆகிய இருவரின் தென்னந் தோட்டத்திற்குள் புகுந்த காட்டுயானைகள் சுமார் 110 தென்னை மரங்களை அழித்துள்ளன.


காலத்திற்கு காலம் காட்டு யானைகளால் இவ் வாறான அழிவினை சந் தித்துள்ளதாக தெங்கு செய் கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

வேலிகளை சேதப்ப டுத்தி தென்னந்தோட்டத் திற்குள் புகுந்து கொள்ளும் யானைகளால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தற்போதைய பொருளாதார விலையேற்றத்தினால் அவற்றை சீர்செய்ய முடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளதாகவும் காணியின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

யானைகளினால் ஏற் படும் இவ்வாறான இழப் புக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டுவதுடன் சரியான முறையில் யானைவேலிகளை அமைத்து தெங்கு செய்கை யாளர்களை ஊக்கு விக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (நி-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2938

ஜோடன்




றோஸ்




ஹாலிட்




பிரியங்கா




ராஜேஸ்




நிலானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அஸ்தமிக்கப் போகும் தமிழ் அரசியல் கட்சிகள்

ஈழத் தமிழர்களின் அரசியல் என்பது மிகவும் பலயீனப்பட்டு வருவதைப் பலரும் உணர்ந்துள்ளனர்.

உண்மை. சிங்கள அரசியல் கட்சிகளுக்கு நிகராக தமிழ் அரசியல் கட்சிகளின் பலம் இல்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அடிப்படைக் காரணம் தமிழர்களின் அரசியல் தலைமை என்பது கொழும்பை மையப்படுத்தியதாக இருந்தமையாகும்.

அதாவது இப்போது தமிழ் அரசியல் கட்சிகளின் உறவும் தொடர்பாடலும் எதிர்கால அரசியல் எதிர்பார்ப்புக் கொண்டவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதேயன்றி, பொதுமக்களுடன் அல்ல என்பது தெட்டத் தெளிவாகிறது.

பொதுமக்களுடன் கலந்துரையாடாத, அவர்களுடன் சந்திப்பை மேற்கொள்ளாத அரசியல் என்பது சூனியமானது. அவ்வாறான அரசியல் கட்சிகள் பெயரளவில் இயங்க முடியுமேயன்றி அவற்றால் தாம் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய மக்களுக்கு எதனையும் செய்ய முடியாது.

தவிர, தமிழ் மக்கள் காலாகாலமாக நம்பியிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செயற்படவில்லை.

சுருங்கக்கூறின் அந்தக் கட்சியின் அஸ்தமனத்தை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தர் தானே எழுதி முடித்துவிட்டார்.

உண்மை. இப்போது இரா.சம்பந்தர் அவர்கள் 90 வயதைக் கடந்துள்ளார். முதுமைக்குரிய அத்தனை இயல்புகளும் அவரிடம் குடிகொண்டுள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில் தொடர்ந்தும் தமிழ் அரசியல் தலைமையில் அவர் இருப்பதென்பது எம் தமிழ் மக்களின் பலயீனமாகவே கருதப்படும்.

உண்மையில் அடுத்த தலைமைக்கு அவர் விட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால் அதனை அவர் ஒருபோதும் செய்யமாட்டார்.

அதேநேரம் தமிழர்களின் அரசியல் தலைவராக இரா.சம்பந்தர் அவர்கள் இருக்கும் வரை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது சம்பிரதாயச் சடங்காக இருக்குமேயன்றி, மற்றும்படி அது ஆரோக்கியமானதாக ஒருபோதும் அமையாது.

இதுதான் என்றால், எமக்கு இன்னொரு அரசியல் பலம் வேண்டும் என்று யார் யாரையெல்லாம் தமிழ் மக்கள் நினைத்தார்களோ அவர்கள் அத்தனை பேரும் தமிழர்களின் அரசியல் களத்தை சிதலமடையச் செய்து போட்டுடைத்துவிட்டார்கள்.

இதற்கும் மேலாக, தமிழ் மக்களின் உரிமைக்காக – தமிழ் மக்களின் நலனுக்காக என்று கோசம் போடுகின்ற அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு பொது அமைப்பு இருக்க வேண்டும் என்ற கருத்தியலில் உடன்படவில்லை.

இதன் காரணமாக, மக்கள் இயக்கமாக எழுச்சி பெற்ற தமிழ் மக்கள் பேரவையின் குரல்வளை நசுக்கப்பட்டது.

இதன் விளைவுதான் அண்மைக்காலமாக மக்கள் போராட்டம் தோல்வியில் முடிந்து போகிறது.

ஆக, இதே நிலைமை நீடிக்குமாயின், தமிழ் அரசியல் கட்சிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்.

# எரிபொருள் கையிருப்பை பேணுமாறு எரிசக்தி அமைச்சிற்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் போதுமான எரிபொருளை கையிருப்பில் சேமித்து வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் - காஸா பகுதியில் நிலவி வரும் மோதல், உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்து வருவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து களஞ்சியசாலைகளிலும் போதியளவு எரிபொருள் இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் போர்கள் நீண்ட காலப் போராக மாறும் என்ற நம்பிக்கையில் மசகு எண்ணெய் உற்பத்தியாளர்களும் தங்கள் உற்பத்தி நடவடிக்கைகளைக் குறைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# யாவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு ஹர்த்தாலை வெற்றி பெறச் செய்திடுவோம்

## தமிழ் அரசியல் கட்சிகள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி வேண்டும், நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் உட்பட வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு மறுக்கப்படும் நீதி உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்க் கட்சிகள் எதிர்வரும் 20ஆம் திகதி முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ள ஹர்த்தால் முழுமையாக வெற்றி பெறுவதற்கு அனைத்து தரப்புக்களும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென தமிழ் அரசியல் கட்சிகள் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளன.

இலங்கை தமிழ் அரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் உள்ளிட்ட தரப்புக்களே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன.

இதேவேளை, ஹர்த்தாலுக்கான ஆதரவினையும் ஒத்துழைப்புக்களையும் பொதுமக்களிடத்தில் கோருகின்ற துண்டுப் பிரசுர விநியோகமும் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்க ப்படவுள்ளதாகவும் அக்கட்சிகள் அறிவித்துள்ளன. (ம-7)

# திடீரென நாடு திரும்பினார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், பல உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளை இரத்து செய்துவிட்டு திடீரென நாடு திரும்பியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் திடீரென நாடு திரும்பியது குறித்து இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

எனினும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உடன் இந்திய வெளியுறவு அமைச்சர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடிவிட்டு திடீரென நாடு திரும் பியதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ம-7)

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த தொடர்ந்து ஆதரவு தரப்படும்

## ஐ.எம்.எப் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் திட்டத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஆகியோருக்கு இடையில் மொரோக்கோவின் மராகேஷில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டுடன் இணைந்து இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மொரோக்கோவில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்ததுடன் பொருளாதார ரீதியாக இலங்கைக்கான பல முக்கிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (ம-7)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த மாதம் இழப்பீடு

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு அடுத்த மாதம் முதல்வழங்கப்படுமெனவிவசாய அமைச்சர்மஹிந்த அமரவீரதெரிவித்துள்ளார்.

இந்த வருடம் 58,770 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கை [illegible] வடைந்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 53,965 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரச வைத்திய அதிகாரிகள் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, புத்திஜீவிகள் வெளியேற்றம் சுகாதார பிரச்சினைகள் உள்ளிட்ட வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் 8 விடயங்களை உள்ளடக்கிய ஆலோசனைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பரிந்துரைகளை கையேற்றதுடன், உரிய பரிசீலனைக்கு உட்படுத்துவதாகவும் குறிப்பிட்டதோடு, சீனாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் மீண்டும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரைச் சந்திப்பதாகவும் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர். ஹரித அலுத்கே, உப தலைவர் வைத்தியர். சந்திக எபிகடுவ மற்றும் சங்கத்தின் உதவி செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகதி ரயிலுடன் மோதுண்டு 17 கால்நடைகள் உயிரிழப்பு

## ஆனையிறவில் சம்பவம்



(தருமபுரம்)

ஆனையிறவுப் பகுதியில் கடுகதி ரயிலுடன் மோதி 17 கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலுடன் மோதுண்டதில் 11 பசுமாடுகளும் 6 நாம்பன் மாடுகளும் உயிரிழந்துள்ளன.

உமையாள்புரம் பகுதியைச் சேர்ந்த கால்நடை உரிமையாளரின் கால்நடைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-316)

# காஸா பகுதியில் இருந்து 20 இலங்கையர்கள் வெளியேற்றம்

## இலங்கை தூதுவர் தெரிவிப்பு


(ஜெருசலேம்)

காஸாவை அண்மித்த பகுதியில் இருந்து 13 இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார். காஸாவை அண்மித்த பகுதியில் சுமார் 20 இலங்கையர்கள் தொழில் புரிந்து வந்த நிலையில், குறித்த 13 பேரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும் 7 பேரை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் காரணமாக காணாமல் போன இலங்கையர்கள் இருவர் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே இடம்பெறும் மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,000 ஐ கடந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)



149 ஆவது அஞ்சல் தினத்தினை முன்னிட்டு வவுனியா அஞ்சலக விளையாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் சைக்கிள் ஓட்டப்போட்டி கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

(படம்- வசந்தரூபன்)

# முல்லை மாவட்ட விவசாய அமைப்பு திணைக்களங்களுடனான சந்திப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய அமைப்பு திணைக்களங்களுடனான சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, கிராமிய இராஜாங்க அமைச்சர் மஸ்தான், வடமாகாண பிரதம செயலாளர் சமன்பந்துலசேன, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் எஸ்.விகிதரன் , கமநல சேவைகள் நிலைய உதவி பணிப்பாளர் பரணிதரன், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி ஜாமினி சுசீலடன் மற்றும் அரச உயர் அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது அழிவடைந்த பயிற்செய்கைக்கான காப்புறுதி காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கடந்த கால உழுந்து, பயறு செய்கை தொடர்பாகவும், கடந்த கால மற்றும் எதிர்கால நெற்பயிர்ச் செய்கை, பயிற்செய்கையின் போது யானையின் தாக்கம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் விவசாயிகளது கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யானை, குரங்கு அச்சுறுத்தல் இருப்பதாக விவசாய அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர். இதற்காகவே நான் சீனாவுக்கு குரங்களை அனுப்புவதற்கு முயற்சி செய்த போது சுற்றாடல் அதிகார சபையால் வழக்கு தொடுக்கப்பட்டதனால் இடைநடுவில் விடப்பட்டதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். (நி-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 120 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 450 |
| தக்காளி | 250 | 300 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 150 | 160 |
| கோவா | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 250 | 260 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 320 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 220 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 240 | 400 |
| லீக்ஸ் | 160 | 150 | 140 | 150 |
| பீற்றூட் | 140 | 140 | 140 | 200 |
| கறிமிளகாய் | 300 | 240 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 100 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 150 | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| சரப்பலா | 100 | 100 | 100 | 150 |

# குடிநீர் பிரச்சினையை குறைக்க கிணறு அமைத்துக் கையளிப்பு



(முல்லைத்தீவு)

மணவாளன்பட்ட முறிப்பு கிராமத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் நிதி பங்களிப்பில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஒழுங்குபடுத்தலோடு கிணறு அமைத்து பொதுமக்களின் பாவனைக்கு கடந்த புதன் கிழமை கையளிக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் வறட்சி காலத்தில் தண்ணீர் வற்றும் நிலை காணப்படுவதனால் அதனை நிவர்த்தி செய்ய குடிநீர் விநியோகம் வழங்கி வைக்கப்பட்டு வந்திருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு குறித்த பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்சினையினை சீர் செய்யும் நோக்கில் இந்த குடிதண்ணீர் திட்டம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-292)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனா...

கிளினிக்குகளும் திங்கட்கிழமை முதல் வைத்தியசாலையின் உட்புறம் இரு வெவ்வேறு இடங்களில் நடைபெறும் என வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில், மருத்துவக் கிளினிக்கில் சிகிச்சை பெற வருபவர்கள் அனைவரும் விக்ரோரியா வீதியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள நுழைவாயிலூடாக (இல.9 B) வருகை தந்து வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிளினிக்கில் சிகிச்சை பெற முடியும்.

அதேவேளை இதய சிகிச்சை கிளினிக்கில் சிகிச்சை பெற வருபவர்கள் விக்ரோரியா வீதியில் உள்ள வைத்தியசாலையின் 11ஆம் இலக்க நுழைவாயிலூடாக வருகைதந்து இதய சிகிச்சை கிளினிக்கிற்குச் செல்ல முடியும். இது இதய சிகிச்சை விடுதிக்கு பின்புறம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை நிலையத்தில் நடைபெறும் என்றுள்ளது. (ம-7,33)

## தீக்காயத்துக்...

தித்துறையைச் சேர்ந்த குமரன் கர்னிகா (வயது- 29) என்ற மூன்றுபிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

கணவனுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனக்குத்தானே தீ மூட்டிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று சனிக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டபின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,60)

## பாதுகாப்பு...

வந்த நபர் மீது தாக்குதல் மேற்கொண்ட இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இன்றிலிருந்து (நேற்று) கடமை நீக்கம் செய்யப்படுவதாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை நுழைவாயிலில் வைத்தியசாலைக்கு வந்த நபர் ஒருவர் பாதுகாப்பு ஊழியர்களால் தாக்கப்பட்ட சம்பவமானது கண்டிக்கப்பட வேண்டியது.

இந்த விடயத்தை நான் மிகவும் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளதோடு குறித்த பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் தனியார் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு காவலாளிகளையும் இன்றிலிருந்து (நேற்று) வைத்தியசாலை பாதுகாப்பு கடமைக்கு அனுப்ப வேண்டாம் எனவும்அவர்களுக்கு எச்சரித்துள்ளேன்.

இவ்வாறான சம்பவங்களை இனி மேலும் ஏற்றுக்கொள்ள முடியாது அதாவது பொதுமக்கள் வைத்தியசாலைக்கு சுதந்திரமாக வந்து தமது மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் மூலம் அவை மழுங்கடிக்கப்படக்கூடாது எனவும் தெரிவித்தார்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மதுபோதையில் வந்த நபர் அநாகரிகமாக நடந்து கொண்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு வைத்தியசாலைக்குள் செல்ல முற்பட்டபோதே பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், அந்நபர் மீது தாக்குதலை மேற்கொண்டனர் என பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தரப்பு தெரிவித்தது.

யாழ்.போதனா வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகில் நபர் ஒருவரை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தாக்கும் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகியது.

சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் தாக்குதலுக்கு இலக்கான நபரையும், தாக்குதல் மேற்கொண்ட பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் தாக்குதல் நடத்திய காவலாளிகள் தாங்கள் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் பொலிஸில் விளக்கமளித்துள்ளனர்.

இது தொடர்பான காணொளி சமூக ஊடகங்களில் வெளியாகி பல்வேறு தரப்பாலும் கண்டனங்களுக்குள்ளானது.

சம்பவத்தை வீடியோ எடுத்த மருத்துவபீட மாணவி மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவ பீட மாணவியின் கைத்தொலைபேசியையும் பறித்து எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,33,104)

## யாழில்...

கள் மத்தியில் பேனாக்கள் விநியோகிக்கப்படுகின்றன.

வெளியில் பார்ப்பதற்கு பேனா போல் இருந்தாலும், அதன் குழாயை ஆய்வு செய்யும்போது, அதில் ஒரு சிகரெட் உள்ளது. இந்த போதைப் பொருட்களை பாடசாலை மாணவர்களிடையேவிநியோகிக்க டீலர்கள்பல்வேறுயுக்திகளை கையாளுகின்றனர்.

மேலும் புத்தம் புதிய போதை மருந்து ஒன்று சந்தைக்கு வந்துள்ளது.

பார்க்கும் பார்வையில், இது ஒரு வாசனை திரவிய போத்தல் அல்லதுஒரு இன்ஹேலரின் வடிவத்தை ஒத்ததாக உள்ளது.

மிகவும் விரும்பத்தக்கது. நல்ல வாசனை கொண்டது. இதுமொபைல் போன் சார்ஜர் மூலம் சார்ஜ்செய்யக்கூடிய மின்சாரத்தில் ஆவியாகக் கூடியது. இந்த ஆவியை மாணவர்கள் சுவாசிக்கும் போது போதை உருவாகின்றது. மிக அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

இது மிகவும் அபாயகரமானது, என்பதோடு எதிர்கால இளஞ் சமூகத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையாகவும் இதனை எச்சரிக்கையோடு நோக்க வேண்டியுள்ளது. ஆகவே பிள்ளைகளை கவனித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## உடுப்பிட்டியில்...

பொன்னன் யோகராஜா (வயது- 70) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன்போது வயோதிபர் சந்நிதி கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியில் சனசமூக நிலையத்தில் மழைக்கு ஒதுங்கியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)


மிகச் சிறிய முதல் வெறும் 40/- ரூபாவில்
20 லட்சம் வெல்லப்பட்டுள்ளது.
அதிர்ஷ்டத்தின் அடையாளம் NLBயின் 12.10.2023 வியாழன் கொவிசெத (3507) சீட்டிழுப்பில் 4 இலக்கங்களும் (17-31-42-71) பொருந்தியதில் ரூபா 20 லட்சம் (2,000,000/-) எமது விற்பனையில் வெல்லப்பட்டுள்ளது.
வெற்றியாளருக்கு வாழ்த்துக்கள்
நடராஜா அதிர்ஷ்ட இல்லம் நடராஜா வசீகர்
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்......
கொவிசெத 2,000,000
F 17 31 42 71
(C-7430)

தன நிதானய
திகதி - 2023.10.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1297
J 07 08 50 56 J
38848

லக்கி 7
திகதி 14.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0093
L7 இலக்கம் 2 3
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 6 0 2 2 5 0

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.14
சீட்டிழுப்பு இலக்கம் 576
கன்னி 15 21 32 60 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/10/14
சீட்டிழுப்பு இலக்கம் 5267
A 4 3 5 9 0 2

மெகா பவர்
திகதி 14/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1615
P 24 35 62 76 78
16852

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3509
சீட்டிழுப்பு திகதி 14.10.2023
H 38 42 60 70
H 65572
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2241 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.14 தினம் சனிக்கிழமை
16 43 44 67 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,578,056.00
DLB

சனிதா
திகதி 2023.10.14 வெற்றி வாரம் 4402
11 14 32 33 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,612,596.00
71139

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3953 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.14 தினம் சனிக்கிழமை
06 07 42 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,350,856/-
936182 342

கப்ருக
திகதி 14.10.2023 வெற்றி வாரம் 1417 வர்ணம் சிவப்பு
Y 40 04 24 28 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 452,040,474.20
724134 463
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சம்பத வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 637 திகதி 2023-10-14 வர்ணம் ஆரஞ்சு நிறம்
L 34 42 67 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,384,632.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே : 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2067
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.10.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,668,168/-
27 42 46 50 N
791394


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் மொழி
### சிங்கள வகுப்புக்கள் தரம் 6–11

யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் திருமண மண்டபத்திற்கு அருகில் நடைபெற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்ட வகுப்புகள் மீண்டும் 18.10.2023 புதன்கிழமை ஆரம்பமாகின்றது.
இடம் : 40, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**077 990 6867**
**077 214 0220**
(17435)

## வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றில் 18 – 30 வயதிற்குட்பட்ட ஆண் வேலையாள் தேவை.
தொடர்புகளிற்கு (17411)

**077 937 0000**
**075 988 1000**

## A/L Biology/ Chemistry

- English Medium
- Tamil Medium

Online Classes
- Theory
- Revision
- Past Paper Discussion

Jaffna Lecturer (17450)

**077 807 5566**

## ARA MULTY Traders
Online Courier Delivery



சர்வதேசசிக்கன பொதிகள் பரிமாற்று சேவை
No. 119, Nedunkulam Road, Ariyalai, Jaffna.
(17440)
**074 038 3290**

## காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு நவற்கிரி சந்திக்கு அருகில் அச்சுவேலி வீதியில் 14 பரப்பு தோட்டம் விற்பனைக்குண்டு. இரண்டு பேர் சேர்ந்து இரண்டாக பிரித்து இரண்டு வீடும் கட்டலாம். பரப்பு 12 இலட்சம் (17428)

**077 706 6487**

## விமலம் திருமண சேவை

கனடா, இலங்கை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு வரன்கள் தாராளமாக உள்ளன. (17455)

கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
**077 240 9276**

## மணமகள் தேவை

1982 ஆம் ஆண்டு பிறந்த ஆயிலிய நட்சத்திரமுடைய கனடா வதிவிட வாய் பேச முடியாத மணமகனுக்கு வாய் பேச முடியாத மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் தற்போது இலங்கையில் உள்ளார். (17434)

**077 990 6867**
**077 214 0220**

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
**0777 554 528** (17470)

## UK WORK VISA
### HEALTH CARE ASSISTANCE AND NURSES



REQUIREMENTS
- Diploma in caregiver
- UKVI IELTS 4.5 (English medium degree holder waived off from IELTS Requiment)
- Work experience

BENEFITS
- Family visa eligibility
- 3 or 5 years visa sponsorship

FASTEST EMPLOYMENT CONFIRMATION — Fastest Service

FOR MORE DETAILS CONTACT US
**0773835389** (17448)

## பெண் வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை!!!
**தகுந்த சம்பளம் அனுபவத்திற்கேற்ப வழங்கப்படும்.**
**வயதெல்லை : 20 - 45** (17447)

**076 832 3682**

## Sales Rep தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு Sales Rep தேவை. அனுபவமுள்ளவர் மற்றும் Motorbike உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (17449)

**TP : 077 171 8777**
**Email : admin@mbilk.com**

## அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் **0768226244**
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் (C-7433)
விண்ணப்ப முடிவு திகதி **07-11-2023**
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242 |
| யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 | 0764550675 |
| மானிப்பாய் 0768226238 | புத்தூர் 0764550671 | 0777718322 | 0777728322 | 0743900353 | 0777720322 |
| கோப்பாய் 0764550674 | V2 Travels | | | 0768226236 | |

## CANADA VISA

Canada, UK, France, Australia மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
Contact : VISA Consultant, 136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584 (17470)

## A/L ICT வகுப்புக்கள் — திரு.இ.குமரன்

**A/L 2025**
Computer System
Boolean Algebra
அடுத்தது
Computer Networks
Operating System

**A/L 2023 Paper**

**A/L 2024**
Database Systems
அடுத்தது
Python Programming
Paper Class

Computer Lab
Study Guide
Unit Exam
Past Papers

வடக்கில் ICT பாடத்தில் அதிக A சித்தி பெறும் ஒரே நிறுவனம்
ICT துறையில் 20 வருட கற்பித்தல் அனுபவம்
100% Practical-Oriented Class
MIS ICT COLLEGE (17397) TP:0776577359 #74, Sabapathy Lane, Jaffna.

## அமெரிக்க லொத்தர் விசா

2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
★5000 இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்.
★அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. (17470)
**077 755 4528**

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7433)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265/= | (max2Kg) |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 289/= | (max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 439/= | (max 2Kg) |
| 1 Kg அவல் | - 269/= | |
| 1 Kg பெரிய கடலை | - 680/= | |
| 1 Kg சர்க்கரை | - 290/= | |
| 1 Kg கற்கண்டு | - 445/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg கோதுமை மா | - 180/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 550/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1030/= | ~~(1080/=)~~ |
| 1 மங்களம் ஊதுபத்தி | - 160/= | ~~(200/=)~~ |
| 70g Baby Soap | - 108/= | ~~(145/=)~~ |
| 300g நெஸ்டமோல்ட் | - 570/= | ~~(620/=)~~ |

**1030/=**



~~1080/=~~ (17468)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

## Annamalian Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd



'அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண கலாசார மண்டபத்தில் நடந்த எங்களுடைய கல்யாணத்தையும் இசை விருந்தையும் எங்களால் மறக்கவே முடியாது. அவ்வளவு சிறப்பாக நடந்தது என்று கூறலாம்.'
டாக்டர் விஷ்ணுவர்த்தன் டாக்டர் ஜோதிகா தம்பதியினர்.

**திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், முஸ்லிம் நிக்கா(திருமணங்கள்) ஏனைய வைபவங்களையும் நடத்துவதற்கு நாடுங்கள்.**

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**
**இல. 542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.** (17446)

**தொலைபேசி எண் : 021 222 1355**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org